Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

MONDAY, JUNE 26, 2023

திங்கட்கிழமை ஜூன் 26, 2023 | ஒளி: 09 கதிர்: 026 | பக்கம்: 06 | நகரப்பதிப்பு★ | FREE




## சின்னத் தேர்தல் குறித்து பேச்சு

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பில் ஜனாதிபதி, பிரதமர், அமைச்சர்கள் மற்றும் அரசியல் கட்சிகளுடன் விசேட கலந்துரையாடலை விரைவில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2



50 சதவீதம் தீர்ந்ததாக கூறியமை

## ஜனாதிபதியின் ஏமாற்று வித்தை

■ வ.சக்தி

மறைந்த தமிழ் உறவுகளை நினைவேந்துவதற்கு மட்டும் இடமளித்துள்ள ஜனாதிபதி ரணில், எப்பிரச்சினையும் தீர்க்கப்படாத நிலையில் தமிழர்களின் 50 சதவீதமான பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு விட்டதாக கூறியமை பொய்யாகவும் ஏமாற்று வித்தையாகவும் அமைந்துள்ளது

தொடர்ச்சி P2

வடக்கு, கிழக்கில் நடப்பது

# ஒரு மௌன யுத்தம்



**குருந்தூரில் பூர்விகமான தமிழரின் காணிகளே தொல்பொருள் என்ற பெயரில் அபகரிக்கப்பட்டன**

**சரத்வீரசேகர, கம்மன்வெல, வீரன்ச போன்றவர்கள், நிகழ்ச்சி நிரலுக்குள் செயலாற்றுகிறார்கள் கொண்டு**

■ கனகராசா சரவணன்

வடக்கு, கிழக்கில் நடந்து கொண்டிருப்பது ஒரு மௌன யுத்தம் என்றும் தமிழ் மக்களின் காணிகள் அபகரிப்பு, தமிழர் பிரதேசங்கள் எங்கும் விகாரைகளை, குறிப்பாக உயர்ந்த மலைகளில் அமைப்பது சுற்றுலா பயணிகள் கூட இலங்கை ஒரு பௌத்த நாடு என்பதை பறைசாற்றுவதற்காக இந்தத் திட்டங்களை செய்து வருகின்றனர் என்று பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரன் தெரிவித்தார்.

இந்த நாட்டில் தமிழ் மக்களின் விகிதாசாரத்தை குறைக்கவேண்டும் எனத் திட்டமிட்டு 1949ஆம் ஆண்டு முதல், பிரதமரான டி.எஸ்.சேனநாயக்கா கிழக்கு மாகாணத்திலே

தொடர்ச்சி P2

டெங்கு நோயாளர்களில்

## 75 % மானோர் சிறுவர்கள் அல்லர்



ஜனவரி மாதம் முதல் இதுவரையான காலப்பகுதியில் 47 ஆயிரத்துக்கும் அதிகமான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர் என்றும் பதிவாகும் நோயளர்களில் 75 சதவீதமானவர்கள் 15 வயதுக்கு மேற்பட்டவர்கள் என்றும் உடலியல் நோய்கள் தொடர்பிலான விசேட வைத்திய நிபுணர் ஆனந்த விஜேவிக்ரம தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## திறன் போதாமையே தாமதத்துக்கு காரணம்





மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தில் சாரதி அனுமதி பத்திரங்களை அச்சிடுவதற்குத் தேவையான அச்சு இயந்திரங்களின் திறன் போதாமையே சாரதி அனுமதிப்பத்திரங்களை வழங்குவதில் ஏற்படும் தாமதங்களுக்கு காரணம் என்று மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளர் நாயகம் நிஷாந்த அனுருத்த வீரசிங்க தெரிவித்தார்.

தற்போது சாரதி அனுமதி அட்டைகளை அச்சிடுவதற்காக உள்ள 5 இயந்திரங்கள் மூலம் நாளொன்றுக்கு சுமார் 4 ஆயிரம் சாரதி அனுமதி அட்டைகள் அச்சிடப்படுகின்றன என்றும் அவற்றில் சுமார்

தொடர்ச்சி P2

## கொழும்பில் மாடி குடியிருப்புகள் இடிந்து விழும் அபாயம்




கொழும்பு மாநகர சபையின் அதிகாரத்துக்கு உட்பட்ட பிரதேசங்களில் உள்ள 8 அரச அடுக்குமாடி குடியிருப்புகள், பாழடைந்து காணப்படுவதால், அந்த வீடுகளில் வசிக்கும் மக்களின் உயிருக்கு பாரிய அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகவும், அந்த வீட்டுத் தொகுதிகளை இடித்துத் தள்ளுவதற்கு முன்வந்துள்ளதாகவும் தேசிய கட்டட ஆய்வு நிறுவனத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## ஆளும் கட்சியினருக்கு அதிரடி கட்டுப்பாடு

ஆளும் கட்சியினருக்கு அதிரடி கட்டுப்பாடு விதித்துள்ளது ஆளும் கட்சியின் பிரதம கொறாடா காரியாலயம். இது தொடர்பில் ஆளும் கட்சியில் அங்கம் வகிக்கும் சகலருக்கும் 'வட்ஸ்அப்' ஊடாகவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.



தொடர்ச்சி P2

பொகவந்தலாவை இளைஞர் மீது பொலிஸார் தாக்குதல்

## களத்தில் இறங்கி கண்டித்தார் ஜீவன்

■ எஸ்.கணேசன்



பொகவந்தாலாவ நகரில் கைது செய்யும் போர்வையில் இளைஞர் ஒருவர் மீது பொலிஸார் நடத்தியுள்ள தாக்குதலை வன்மையாகக் கண்டித்துள்ள இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், அமைச்சருமான ஜீவன் தொண்டமான், இச்சம்பவம் தொடர்பில் பொலிஸாருக்கு எதிராகவும் சுயாதீன விசாரணை நடத்தப்பட வேண்டும் என வலியுறுத்தினார்.

தொடர்ச்சி P2



## அலி சப்ரி- குயின் கேங் சந்திப்பு

இலங்கை வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, சீன வெளியுறவு அமைச்சர் குயின் கேங்கைச் சந்தித்தார்.
இந்தச் சந்திப்பில், இருதரப்பு உறவு மற்றும் பொருளாதார ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவது குறித்து கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

கடவுச்சீட்டுக்காக ஒன்லைனில்

## 9 நாள்களில் 9 ஆயிரம் விண்ணப்பங்கள்

ஜூன் 15 ஆம் திகதி முதல் கடவுச்சீட்டு விண்ணப்பங்களை ஒன்லைனில் ஏற்றுக்கொள்ளும் நடை முறை ஆரம்பமான நிலையில், கடந்த ஒன்பது நாள்களில் 9,158 விண்ணப்பங்கள் ஒன்லைன் முறை மூலம் பெறப்பட்டுள்ளதாக குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகம் ஹர்ஷ இல்லுக்பிட்டிய தெரிவித்தார்.

கடவுச்சீட்டுகளை சாதாரண சேவையின் கீழ் பெற்றுக்கொள்வதற்கு இதற்கு முன்னர் 14 வேலை நாள்கள் தேவைப்படுகின்ற நிலையில், புதிய விசேட முறையின் மூலம், விண்ணப்பங்களைச் சமர்ப்பித்த மூன்று நாள்களுக்குள் கடவுச்சீட்டுகள் வழங்கப்படுகின்றன.

தொடர்ச்சி P2

## வைத்திய நிபுணர்களுக்கு பற்றாக்குறை ஏற்படும்


அரச வைத்தியசாலைகளில் இந்த ஆண்டு இறுதிக்குள் 750 வைத்திய நிபுணர்களுக்கு பற்றாக்குறை ஏற்படும் என்று சுகாதார அமைச்சின் வருடாந்த இடமாற்ற அறிக்கை மூலம் அறிய முடிகிறது.

வைத்தியசாலைகளுக்கு 2,250 வைத்திய நிபுணர்கள் தேவைப்பட்டாலும், கடந்த ஆண்டு இறுதியில் 300 நிபுணர்களுக்கு பற்றாக்குறை நிலவியதாக அறிக்கை வெளிப்படுத்துகிறது.

தொடர்ச்சி P2

'பிக்மி' மற்றும் 'ஊபர்'இல்

## பதிவு செய்வதால் மேலதிக வருமானம்




'பிக்மி' மற்றும் 'ஊபர்' சேவை வழங்கும் நிறுவனங்களில் பதிவு செய்வதால் பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்துக்கு அண்மையில் வாகனத் தொழிலை வாழ்வாதாரமாக கொண்ட உரிமையாளர்களுக்கு பதிவுசெய்யப்பட்ட வாடகை வாகனங்களில் மேலதிக வருமானம் பெறும் வாய்ப்பு உள்ளதாக ஆளும் கட்சியின் பிரதான அமைப்பாளர் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

## 'குண்டு' பிடித்தால் கூட சன்மானம்

சட்டவிரோத துப்பாக்கிகள் மற்றும் கைக்குண்டுகளை கைப்பற்றும் பொலிஸ் அதிகாரிகளுக்கு வழங்கப்படும் சன்மானத் தொகையை அதிகரிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஆலோசனைக் கோவை ஒன்றினூடாக உயர் பொலிஸ் அதிகாரிகளுக்கு இந்த விடயம் தொடர்பில் பொலிஸ் மா அதிபர் விடயங்களை தெளிவுபடுத்தியுள்ளார் என்று பொலிஸ் மா அதிபரின் உத்தியோகபூர்வ அலுவலகம் அறிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

## ஐ.ஜி.பிக்கு நீடிப்பு



மார்ச் 26ஆம் திகதியன்று ஓய்வு பெறவிருந்த பொலிஸ் மா அதிபர் சி.டி. விக்ரமரத்னவுக்கு, அரசாங்கம் மூன்று மாத கால சேவை நீடிப்பை வழங்கிய நிலையில், அவருக்கு இரண்டாவது சேவை நீடிப்பு வழங்கப்படவுள்ளதாக அரசாங்கத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

புதிய பொலிஸ் மா அதிபர் தொடர்பில் அரசியலமைப்பு சபைக்கு இதுவரை வேட்புமனு தாக்கல்

தொடர்ச்சி P2

## மாயமாக முயன்ற மரண தண்டனை கைதி கைது

மரணதண்டனை விதிக்கப்பட்டு, வெலிக்கடை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த கைதியொருவர் தப்பிச் செல்ல முயன்ற வேளையில் கைது செய்யப்பட்டுள்ளார்.

சமய வழிபாட்டு நிகழ்வுக்காக ஞாயிற்றுக்கிழமை (25) காலை வெளியே அழைக்கப்பட்டிருந்த சந்தர்ப்பத்தில் குறித்த கைதி தப்பிச்செல்ல முயன்றுள்ளார்.

தொடர்ச்சி P2



## அஸ்வெசும கால அவகாசம் நீடிப்பு



அஸ்வெசும திட்டத்தில் உள்வாங்கப்படாத குடும்பங்களுக்கு சமுர்த்தி நன்மையை பெற்றுக் கொள்வதற்காக மேன்முறையீடுகளை சமர்ப்பிப்பதற்கான கால அவகாசம் ஜூலை மாதம் 10 ஆம் திகதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளதாக பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

குறைந்த வருமானம் உள்ளவர்கள் அல்லது பல்வேறு நோய்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு திட்டத்தின் ஊடாக நன்மை கிடைக்க வேண்டும் என்றார்.

குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களை இந்தத் திட்டத்தில் சேர்ப்பதற்கு அனைத்து தரப்பினரும் ஒன்றிணைந்து செயற்படுமாறு பிரதமர் அழைப்பு விடுத்தார்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# ஒரு மௌன யுத்தம்

கல்லோயா குடியேற்றத்தை ஆரம்பித்து வைத்த காலம் தொடக்கம் இன்று வரை தமிழ் மக்களின் காணிகள் அபகரித்து விகாரைகள் அமைக்கும் திட்டங்களை செய்து வருகின்றனர் என்றார்.

மட்டக்களப்பில் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் பத்மநாபா உள்ளிட்ட தியாகிகளின் 33ஆவது நினைவஞ்சலி சனிக்கிழமை (24) அனுஸ்டிக்கப்பட்டது. அதில் கலந்துகொண்டு அஞ்சலி செலுத்திய பின்னர் உரையாற்றுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்

“ 2009 மே 18 உடன் இந்த ஆயுத போராட்டம் முற்று முழுதாக மௌனிக்கப்பட்டது. இந்த போராட்டம் மௌனிக்கப்படும் முன்னர் பல தலைவர்களை இழந்திருக்கின்றோம். அதில் போராட்ட தலைவர்கள் மாத்திரமல்ல, மிதவாத கட்சியான தமிழர் விடுதலைக் கூட்டணி தமிழரசு கட்சி போன்றவற்றின் தலைவர்கள், அமிர்தலிங்கம் உட்பட பல தலைவர்களை இழந்திருக்கின்றோம்.

ஜே,ஆர். ஜெயவர்த்தன காலத்திலே சமாதான பேச்சுக்கே இடமில்லாமல் தமிழ் மக்களின் குரல்வளையை நசுக்கினார். 2009 வரை தமிழ் மக்களை வஞ்சித்துக் கொண்ட அரசு ஆயுத போராட்டம் மௌனிக்கப்பட்டதன் பின்பு வடக்கு, கிழக்கில் வித்தியாசமான ஒரு திணிப்பை செய்துவருகின்றது

அதுதான் தமிழர் தேசத்தில் விகாரைகள் அமைக்கவேண்டும். தமிழரின் குடிபரம்பலை எவ்வளவு வேகமாக மாற்றி அமைக்கவேண்டும் இணைந்திருந்த வடகிழக்கை வெலிஓயா குடியேற்றம் மூலம் நில தொடர்பற்ற மாகாணங்களாக இரண்டு மாகாணங்களையும் பிரிப்பது போன்ற நடவடிக்கையை திட்டமிட்டு செய்துவருகின்றது

தற்போதைய எதிர்க்கட்சி தலைவரான சஜித், நல்லாட்சி காலத்தில் புத்தசாசன அமைச்சராக இருந்தபோது வடக்கு, கிழக்கில் ஆயிரம் விகாரை அமைக்கவேண்டும் என்றார். தற்போது இலங்கையிலே ஆயிரம் தாது கோபுரங்களை படிப்படியாக அமைக்கவேண்டும் என கூறியுள்ளார்.

குருந்தூர் மலையிலே பூர்வீகமாக தமிழ் மக்கள் வாழ்ந்த காணிகள் இன்று தொல்பொருள் என்ற பெயரில் அபகரிக்கட்டுள்ளது. சரத்வீரசேகர, உதய கம்மன்வெல, விமல் வீரன்ச போன்ற அரசியல்வாதிகள் தங்களது நிகழ்ச்சி நிழலுக்குள் செயலாற்றிக் கொண்டு வடக்கு, கிழக்கு மாகாணங்கள் தமிழ் தாயகம் என தம்பட்டம் அடிக்கும் தமிழர்களுக்கு எச்சரிக்கை விடுப்பதாக சரத்வீரதேசகர தெரிவித்தார்.

எனவே தமிழர்களுடைய தாகம் விடுதலை நோக்கம் இன்னும் தனியவில்லை என அமைச்சருக்கு தெரியவேண்டும். அதேவேளை கோட்டாபயாவின் விசுவாசியான புதிதாக தேசிய பட்டியல் மூலமாக பாராளுமன்றம் வந்த வெளிநாட்டு அமைச்சர், ஒரே இரவில் தீர்வை கொடுக்கமுடியாது கிடைப்பதை பெற்றுக் கொள்ளவேண்டும் என தெரிவித்துள்ளார்.

எனவே இனப்பிரச்சனை தோன்றி எத்தனை ஆண்டுகள் என்று அவருக்கு தெரியாமல் இருக்கலாம், ஒரே இரவில் இந்த பிரச்சனைக்கான தீர்வை கேட்கவில்லை.

நாங்கள் கிடைப்பதை பெற்றுக் கொண்டு எங்கள் மக்களுக்கு துரோகம் செய்வதற்கு நாங்கள் அரசியல் செய்யவில்லை. தமிழ் தேசிய கூட்டமைப்பு, விடுதலைப் புலிகள் இயங்கு நிலை இருந்த காலத்திலே 2001இல் உருவாக்கப்பட்டது.

அப்போது கடந்த கால கசப்பான சம்பவங்களை மறந்து தமிழ் மக்களுக்கு ஒரு பலமான அரசியல் சக்தி இருக்கவேண்டு என்ற காரணத்திற்காக இந்த கூட்டமைப்பை உருவாகினோம்

2009ஆம் ஆண்டு வரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அசைக்கமுடியத சக்தியாக இருந்தது. 2004இல் தமிழர் விடுதலை கூட்டணி வெளியேறியது. 2010 அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் வெளியேறியது.

## ஜனாதிபதியின் ஏமாற்று வித்தை

என்று தமிழ் தேசிய கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஞானமுத்து ஸ்ரீநேசன் தெரிவித்துள்ளார்.

அண்மையில் சர்வதேச ஜனநாயக ஒன்றியத்தின் தலைவர் ஸ்டீபன் கூப்பரை லண்டனில் சந்தித்தபோது இத்தவறான கருத்தினை வெளியிட்டிருந்தார் என்றும் சுட்டிக்காட்டினார்.

மட்டக்களப்பில் ஞாயிற்றுக்கிழமை (25) ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில்,

“இறுதியுத்தம் 2009 மே மாதத்தில் நிறைவடைந்தது. இந்த இறுதி யுத்த காலத்தில், தமிழ் மக்கள் மீது பாரிய அராஜக வன்மங்கள் கட்டவிழ்த்து விடப்பட்டிருந்தன. பல்லாயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டும் காணாமல் ஆக்கப்பட்டும் இருந்தார்கள்.

இவ்விடயம் தொடர்பாக உண்மைகள் கண்டறியப்படவில்லை. பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி வழங்கப்படவில்லை. நல்லிணக்க சூழல் உருவாக்கப்படவில்லை. காணாமல் ஆக்கப்பட்ட தமிழ் உறவுகள் தொடர்பாக நீதி கிடைக்கவில்லை.

பாரிய குற்றமிழைத்த குற்றவாளிகள் கண்டறியப்பட படவில்லை, அவர்கள் தண்டிக்கப்படவில்லை. தமிழ் அரசியல் கைதிகள் இப்போதும் முழுமையாக விடுவிக்கப்படவில்லை.

வடக்கு, கிழக்கில் காணி அபகரிப்புகள் நிறுத்தப்படவில்லை. தமிழர்களின் கலாசார அடையாள அழிப்புகள் நிறுக்கப்படவில்லை. தமிழர் தாயக பூமியில் சிங்கள பௌத்த மயமாக்கல் நிறுத்தப்படவில்லை.

வடக்கு கிழக்கில் இராணுவக் குவிப்புகள் நிறுத்தப்படவில்லை. யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நட்ட ஈடுகள் வழங்கப்படவில்லை. தேசிய இனப்பிரச்சினை தீர்க்கப்படவில்லை. 13வது யாப்புத் திருத்தம் கூட முழுமையாக நடைமுறைப்படுத்தவில்லை.

மாகாணசபைத் தேர்தல் நடாத்தப்படவில்லை, தமிழ் மக்களைக் கொடுமைப்படுத்திய பயங்கரவாத தடைச்சட்டம் நீக்கப்படவில்லை. ஊடக அடக்குமுறை, தமிழ் மக்கள் மீதான அடக்கு முறை நிறுத்தப்படவில்லை.

ஒன்றே ஒன்று மட்டும் தற்காலிகமாக நடந்திருக்கின்றது. மறைந்த தமிழ் உறவுகளை நினைவேந்துவதற்கு மட்டும் ஜனாதிபதி ரணில் இடமளித்துள்ளார். இப்படியாக எப்பிரச்சினையும் தீர்க்கப்படாத நிலையில் 50 சதவீதமான தமிழர்களின் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு விட்டதாக ஜனாதிபதி கூறியமை பொய்யாகவும் ஏமாற்று வித்தையாகவும் அமைந்துள்ளது.

தமிழர்கள், முஸ்லிங்கள், சிங்களவர்கள் மட்டுமல்லாமல் சர்வதேச சமூகத்தையே ஏமாற்றும் நிலையில் ஜனாதிபதியின் கருத்து அமைந்துள்ளது. 75 ஆண்டுகளாக தமிழர்களை ஏமாற்றிய சிங்களத் தலைவர்கள் இன்னும் திருந்தவில்லை என்பதுதான் உண்மை.ஆயின் தமிழர்களின் பிரச்சினையைத் தீர்க்கும் ஆளுமை, இயலுமை சிங்களத் தலைவர்களுக்கு இல்லை என்பதே 75 ஆண்டு காலப் படிப்பினையாகும்.

எனவே, ஈழத்தமிழர்களின் பிரச்சினைக்கான தீர்வானது,இந்தியா உட்பட சர்வதேச சமூகத்திடமே உள்ளது. வடக்கு கிழக்கில் தமிழ் பேசும் மக்கள் சுயமரியாதையுடன் சுய நிருணய உரிமையுடன் வாழ்வதந்தான தீர்வு ஒன்றுதான் தமிழர்களின் தேவையாகவுள்ளது”என தெரிவித்தார்.

## ஆளும் கட்சியினருக்கு அதிரடி கட்டுப்பாடு

அந்த கட்டுப்பாட்டின் பிரகாரம், கொழும்புக்கு வெளியே செல்ல வேண்டாம் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. எனினும், உரிய காரணங்கள் எவையும் அந்த அறிவுறுத்தலில் குறிப்பிடப்படவில்லை.

கடன் மறுசீரமைப்பு பிரேரணை பாராளுமன்றத்திற்கு கொண்டு வரப்படவுள்ள நிலையில், அரசாங்க அமைச்சர்கள் வெளிநாடுகளுக்கு செல்லாமல் கொழும்பில் தங்கியிருக்குமாறு கூறப்பட்டுள்ளதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, இந்த பிரேரணையை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டிய அவசர தேவையாக கருதி பாராளுமன்றத்தை எதிர்வரும் சனிக்கிழமை (01) கூட்டுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அதே வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, ஆளும் கட்சி அமைச்சர்களின் வெளிநாட்டுப் பயணங்கள் இவ்வாரம் நிறுத்தப்பட்டுள்ளதாக அரசாங்கக் கட்சி பிரதம அமைப்பாளர் அலுவலகம் தமக்கு அறிவித்துள்ளது.

லண்டனுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டுக்கு வந்ததையடுத்து, ஆளும் கட்சி பாராளுமன்ற உறுப்பினர் குழுவின் விசேட கூட்டம் எதிர்வரும் 28ஆம் திகதி (புதன்கிழமை) இடம்பெறவுள்ளதாக ஆளும் கட்சி அலுவலகம் தெரிவித்துள்ளது.

## கொழும்பில் மாடி குடியிருப்புகள் இடிந்து விழும் அபாயம்

வகந்த அடுக்குமாடித் திட்டம், பம்பலப்பிட்டி வீடமைப்புத் திட்டம், வேல்ஸ் குமார மாவத்தை வீடமைப்புத் திட்டம், சிறிதம்மா மாவத்தை வீடமைப்புத் திட்டம், கந்தேபுர அடுக்குமாடித் திட்டம், B36 மாளிகாவத்தை வீடமைப்புத் திட்டம், ஜி. எச். ஜே. கே. எம். மற்றும் என். மிஹிந்து மாவத்தை வீடமைப்புத் திட்டம் மற்றும் மிஹிந்து மாவத்தை வீடமைப்புத் திட்டம் ஆகிய எட்டு வீட்டுத் தொகுதிகள் இவ்வாறான நிலையில் ஆபத்தான நிலையில் காணப்படுகின்றன.

அந்த வீட்டுத் திட்டங்களின் ஆளுகை அதிகாரியான கூட்டு ஆதன முகாமைத்துவ அதிகாரசபை அந்த வீட்டுத் தொகுதிகளை இடித்துத் தள்ளுமாறு வீடமைப்பு அமைச்சிடம் முன்மொழிந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## வைத்தியர் நிபுணர்களுக்கு பற்றாக்குறை ஏற்படும்

இந்த ஆண்டு டிசெம்பர் மாதத்துடன் 63 வயதை பூர்த்தி செய்த 55 விசேட வைத்திய நிபுணர்கள் ஓய்வு பெற உள்ளதாக தெரியவருகிறது. இந்நிலையில், 60 வயதில் ஓய்வு பெறும் சட்டம் வைத்தியர்களுக்கும் பொருந்தும் எனின், டிசம்பர் 31ஆம் திகதியன்று ஒரே நேரத்தில் 250 விசேட வைத்திய நிபுணர்கள் ஓய்வு பெறும் அபாயம் இருப்பதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## ஐ.ஜி.பிக்கு நீடிப்பு

செய்யப்படவில்லை என்பதுடன் பொலிஸ் மா அதிபர் சி.டி.விக்ரமரத்னவின் சேவைக்காலம் ஞாயிறு (25) நள்ளிரவுடன் நிறைவுபெறுகிறது.

அத்துடன் அரசியலமைப்பு சபை இன்றும் (26) நாளையும் (27) கூடவதற்கான தீர்மானம் எடுக்கப்படாத நிலையில் புதிய பொலிஸ் மா அதிபர் நியமனம் விரைவாக மேற்கொள்ளப்பட மாட்டாது என்று தெரிவிக்கப்படுகிறது.

புதிய பொலிஸ் மா அதிபர் தொடர்பில் ஜனாதிபதி வருகையின் பின்னர் கலந்துரையாடப்படும் என்றும் தெரிவிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## களத்தில் இறங்கி கண்டித்தார் ஜீவன்

பொகவந்தலாவ நகரில் சனிக்கிழமை (24) திடீரென களமிறங்கிய அமைச்சர் ஜீவன் தொண்டமான், உயர் மட்ட பொலிஸ் அதிகாரிகளையும் சம்பவ இடத்துக்கு அழைத்தார். கைது செய்யப்பட்ட இளைஞர் தரப்பில் உள்ள நியாயத்தை அதிகாரிகளுக்கு எடுத்துரைத்த ஜீவன் தொண்டமான், இது விடயத்தில் சில பொலிஸ் அதிகாரிகள் தமது அதிகார எல்லையை மீறும் வகையில் செயற்பட்டுள்ளனர் எனவும் சுட்டிக்காட்டினார்.

இளைஞரை கைது செய்த பொலிஸார் செயற்பட்ட விதம் தொடர்பில் விசாரித்து அவர்களுக்கு எதிராக உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் அமைச்சர் வலியுறுத்தினார்.

சட்டம், ஒழுங்கை நிலைநாட்டுவதே பொலிஸார் பொறுப்பாகும். மாறாக சட்டத்தை கையில் எடுத்து செயற்படுவதற்கு எவருக்கும் அதிகாரம் கிடையாது எனவும் உயர் மட்ட பொலிஸ் அதிகாரிகளிடம் ஜீவன் தொண்டமான் இடித்துரைத்தார்.

பொகவந்தலாவ நகரில் அமைந்துள்ள அரச வங்கியொன்றுக்கு சென்ற வாடிக்கையாளர் ஒருவருக்கும் வங்கி முகாமையாளருக்கும் இடையில் 22ஆம் திகதி பிற்பகல் முறுகல் நிலை ஏற்பட்டுள்ளது.

வங்கி முகாமையாளரின் அறிவிப்பை அடுத்து பொகவந்தலாவ பொலிஸ் உத்தியோகத்தர்கள் குறித்த இடத்திற்கு சென்று சந்தேக நபரை கைது செய்ய முற்பட்ட போது அங்கு கூடியிருந்தவர்கள் கடும் எதிர்ப்பு வெளியிட்டனர். பொலிஸாரும் தான்தோன்றித்தனமாக செயற்பட்டனர் என விமர்சனம் எழுந்துள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் ஹட்டன் நீதவான் நீதிமன்றத்தில் வெள்ளிக்கிழமை (23) ஆஜர்படுத்தப்பட்டதுடன் அவரை எதிர்வரும் 27 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

## 75 % மானோர் சிறுவர்கள் அல்லர்

எதிர்வரும் பருவகால மழைவீழ்ச்சியின் போது டெங்கு நோய் பரவல் அதிகரிக்கக்கூடும் என்பதால் சுற்றுச்சூழலை தூய்மையாக வைத்திருக்க வேண்டியதன் அவசியத்தையும் வைத்திய நிபுணர் சுட்டிக்காட்டினார்.

தற்போது வரையில் கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களிலேயே அதிகளவில் டெங்கு நோயாளர்கள் பதிவாகின்றனர் எனவும் அங்குள்ள சுகாதார மற்றும் பாதுகாப்பு துறையினருடன் இணைந்து கழிவுகளை அகற்றும் விசேட வேலைத்திட்டம் ஒன்றை முன்னெடுத்துள்ளதாகவும் ஆனந்த விஜேவிக்ரம சுட்டிக்காட்டினார்.

டெங்கு நோய் எந்த வயதினரையும் பாதிக்கும். பதிவாகும் நோயளர்களில் 75 சதவீதமானவர்கள் 15 வயதுக்கு மேற்பட்டவர்கள். இதற்கு முன்பாக சிறு பிள்ளைகள் அதிகமாக பாதிக்கப்பட்டாலும் தற்போது இளைஞர்களே இளைஞர்களே அதிகம் பாதிக்கப்படுகின்றனர் என்றார்.

டெங்கு நோயாளர்களை டெங்கு நுளம்புகள் கடிக்கும் பட்சத்தில் அந்த நுளம்பினால் ஏனையவர்களுக்கு டெங்கு நோய் பரவக்கூடிய சந்தர்ப்பம் அதிகமாகும். பரவுவதற்கான சாத்தியங்கள் அதிகரிக்கும். அதனால் டெங்கு கட்டுபாட்டிற்கு இந்த காரணங்கள் பற்றி அவதானம் செலுத்த வேண்டியது அவசியமெனவும் வலியுறுத்தினார்.

நீங்கள் வசிக்கும் பகுதிக்கு அண்மித்த பகுதிகளை தூய்மையாக வைத்துக்கொள்ள வேண்டியதும் அவசியமாகும். அதனால் நோய் கட்டுப்பாட்டினை ஒருவரால் மாத்திரம் செய்துவிட முடியாது. இந்நாட்டில் அனைவரிதும் ஒத்துழைப்பு அவசியமாகும் என்றும் வலியுறுத்தினார்.

டெங்கு நோய்க்கு இலக்கானவர் எனின் கடினமான வேலைகளில் ஈடுபடுவதை தவிர்க்க வேண்டும். ஓய்வெடுக்க வேண்டியது அவசியமாகும். அவ்வாறு இல்லாவிட்டால் நோயின் பாதிப்பு அதிகரிக்கும். காய்ச்சல் ஏற்படும் போது பெரசிடமோல் தவிர்ந்த ஏனைய மருந்துகளை எடுத்துக்கொள்வதை தவிர்க்க வேண்டும்.

எந்த ஒரு காய்ச்சல் நோயாளிக்கும் வேறு மருந்துகளை வழங்குமாறு வைத்தியர்கள் பரிந்துரைக்கவில்லை. சில நேரங்களில் பெரசிடமோல் மருந்தினால் நோய் முழுமையாக குணமடையாமல் இருக்கலாம்.

## பதிவு செய்வதனால் மேலதிக வருமானம்

தற்பொழுது சுற்றுலாப்பயணிகள் தமது திறன்பேசியின் ஊடாக வாடகை வாகனங்களை பதிவு செய்து அழைக்கும் முறையினை நன்கு அறிநிதிருக்கிறார்கள் என்று தெரிவித்தார்.

சுற்றுலாப் பயணிகளினால் நாட்டிற்கு பெரும் வருமானம் கிடைப்பதால் அவர்களை விசேட கவனத்தில் கொள்ள வேண்டும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

எதிர்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச, “பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்திற்கு அருகில் பதிவுசெய்யப்பட்ட வாடகை வாகனங்கள் சுமார் இரண்டாயிரத்துக்கும் மேல் உள்ளன. வாடகை சேவையில் ஆறு சங்கத்தில் 1057 வாகனங்களும் ரூபவ் டென்டர் முறையிலான ஆறு கவுண்டர்களில் ஊடாக 1000 இற்கும் அதிகமான வாடகை வாகனங்கள் சுற்றுலாப் பயணிகளுக்காக சேவையில் ஈடுபடுகின்றன. அண்மையில் விமான நிலையத்திற்கு பொறுப்பான அமைச்சரினால் கேள்விகோரல் முறையில் அல்லாமல் “ஊபர்” மற்றும் “பிக்மி” வாடகை வாகனங்களை சேவைக்கு உட்படுத்தியதாக தகவல் அறியக் கிடைத்துள்ளது.

## சின்னத் தேர்தல் குறித்து பேச்சு

அரச அதிகாரிகள் தேர்தலுக்கான வேட்புமனுக்களை சமர்ப்பித்துள்ளமை தொடர்பில் பல்வேறு பிரச்சினைகள் எழுந்துள்ளதாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புர குறிப்பிட்டார்.

தேர்தல் பல மாதங்களாக தாமதமாகி வருவதால், வேட்புமனுக்களை இரத்து செய்யுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக இராஜாங்க அமைச்சர் குறிப்பிட்டார்.

சில பாராளுமன்ற உறுப்பினர்கள் தேர்தலுக்கான வேட்புமனுக்களை வாக்கெடுப்பு நடத்துவதில் தாமதம் ஏற்படுவதால், தேர்தலுக்கான வேட்புமனுக்களை இரத்துச் செய்வது நடைமுறைக்குரியது என சுட்டிக்காட்டியுள்ளனர்.

## திறன் போதாமையே தாமதத்துக்கு காரணம்

ஆயிரம் அட்டைகள் ஒரு நாள் சேவையின் கீழ் அச்சிடப்படுகின்றன என்றும் சுட்டிக்காட்டினார்.

தற்போது சுமார் 8 இலட்சம் தற்காலிக சாரதி அனுமதி பத்திரங்கள், அட்டைகள் இல்லாமல் வழங்கப்பட்டுள்ளன என்று தெரிவித்த அவர், தேவையான அட்டைகளை அச்சிடுவதற்கு 5 புதிய அச்சு இயந்திரங்கள் அவசியமெனவும் அதற்கான அமைச்சரவைப் பத்திரம் முன்வைக்கப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டார்.

இதன்படி, அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைக்கப்பெற்றதன் பின்னர், புதிய அச்சு இயந்திரங்களை கொள்வனவு செய்து உரிய சாரதி அனுமதி அட்டைகளை சுமார் 6 மாதங்களுக்குள் வழங்க முடியும் என்றார்.

## 9 நாட்களில் 9 ஆயிரம் விண்ணப்பங்கள்

மேலும், ஒரு நாள் சேவைக்கான கட்டணம் 20 ஆயிரம் ரூபாயாக அதிகரிக்கப்பட்டிருந்த நிலையில், ஒன்லைன் மூல விண்ணப்பங்களுக்கு 15 ஆயிரம் ரூபாயாக கட்டணம் குறைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இதேவேளை, 2022 ஆம் ஆண்டில் 911,689 கடவுச்சீட்டுகள் வழங்கப்பட்டுள்ளதாக குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் வருடாந்த செயல்திறன் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. கடந்த ஐந்து ஆண்டுகளில் 2022 ஆம் ஆண்டே அதிகளவான கடவுச்சீட்டுகள் வழங்கப்பட்டதாகவும் 2021 ஆம் ஆண்டை விட 2022 ஆம் ஆண்டில் 529,138 மேலதிக கடவுச்சீட்டுகள் வழங்கப்பட்டதாகவும் திணைக்களம் தெரிவித்துள்ளது. கடந்த ஆண்டு, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் ஊடாக 20 இலட்சத்து 8 ஆயிரத்து 66 பேர் நாட்டை விட்டு வெளியேறியுள்ள நிலையில், அதில் 11 இலட்சத்து 24 ஆயிரத்து 22 பேர் இலங்கையர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

## ‘குண்டு’ பிடித்தால் கூட சன்மானம்

பொலிஸார் மற்றும் தனியார் உளவுப் பணியில் ஈடுபடுவோரை ஊக்குவிக்கும் வகையில் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்றும் ஞாயிறு (25) முதல் எதிர்வரும் ஜூலை 31 ஆம் திகதி வரை கைப்பற்றப்படும் துப்பாக்கிகள் மற்றும் கைக்குண்டுகள் தொடர்பில் இந்த சன்மானம் வழங்கப்படவுள்ளது.

## அஸ்வெசும கால அவகாசம் நீடிப்பு

அஸ்வசும நலத்திட்டத்தின் கீழ் நலத்திட்ட உதவிகளை இழந்த மக்களின் தகவல்களைப் பெறுவதற்கு விசேட தொலைபேசி இலக்கம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

1924 என்ற அவசர தொலைபேசி இலக்கத்துடன் தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும் என்றும் திங்கள் முதல் வெள்ளி வரை காலை 8 மணி முதல் மாலை 5 மணி வரை குறித்த எண் சேவையில் இருக்கும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## மாயமாக முயன்ற மரண தண்டனை கைதி கைது

சிறைச்சாலை அதிகாரியின் சீருடையை ஒத்த ஆடையை அணிந்து கொண்டே சூட்சுமமான முறையில் தப்பிச் செல்ல முயன்றுள்ளார்.

அவரது செயற்பாட்டில் சந்தேகம் கொண்ட சிறைச்சாலை அதிகாரிகள், அவரை பின்தொடர்ந்து சென்று, மருதானை ரயில் நிலையத்தில் ரயிலொன்றில் ஏறியிருந்த போது கைது செய்து, வெலிக்கடை சிறைச்சாலைக்கு அழைத்துச் சென்றுள்ளனர்.

கொலைக் குற்றச்சாட்டில் குற்றவாளியாக இனங்காணப்பட்டு கம்பஹா மேல் நீதிமன்றத்தில் 2015 ஆம் ஆண்டில் மரணதண்டனை விதிக்கப்பட்ட பன்னல பகுதியைச் 42 வயதானவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பில் தந்தையை பார்ப்பதற்கு

# சைக்கிளில் வந்த 10 வயது சிறுவன்

## கல்முனையில் வைத்து பொலிஸார் மீட்டனர்

■ பாறுக் ஷிஹான்

கொழும்பில் வேலை செய்கின்ற தனது தந்தையை பார்ப்பதற்கு, செல்ல முயன்ற சிறுவனை மீட்ட கல்முனை தலைமையக பொலிஸார், உறவினர்களிடம் ஒப்படைத்துள்ளனர்.

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட அட்டாளைச்சேனையில் 10 வயதுடைய சிறுவன், தனது தாயாருக்கு தெரியாமல் வீட்டை விட்டு அதிகாலை வேளை சென்றுள்ளான். குறித்த சிறுவன் சைக்கிளைப் பெற்றுக் கொண்டு, அக்கரைப்பற்று நகருக்கு சென்று, அங்கிருந்து பஸ்ஸில் கல்முனைக்கு வந்து தனியாக நடமாடி திரிந்துள்ளார்.

தனியாக ஒரு சிறுவன், பாடசாலை பையுடன் சந்தேகத்துக்கு இடமாக நடமாடுவதை அவதானித்த ஒட்டோ சாரதி ஒருவர், கல்முனை தலைமையக பொலிஸாருக்கு அறிவித்துள்ளார்.

இதன்போது, விரைந்து செயற்பட்ட பொலிஸ் குழு, சிறுவனை மீட்டு பொலிஸ் நிலையத்துக்கு அழைத்து வந்தனர். இதன் போது, அச்சிறுவன் தனது தந்தை கொழும்பில் தனியார் நிறுவனத்தில் வேலை செய்வதாகவும் அவரை பார்ப்பதற்கு அங்கு செல்வதற்குத் தயாரானதாகவும் தெரிவித்தான். சிறுவனிடம் தகவல்களைப் பெற்ற பொலிஸார், சிறுவனின் தாயாரை அழைத்து சிறுவனை ஒப்படைத்தனர்.

## யாழ்.விபத்தில் 11 பேர் காயம்

யாழ்ப்பாணம் - கண்டி ஏ-9 வீதியில் கொடிகாமத்தில் தனியார் பஸ்ஸொன்றும் வானும் ஞாயிற்றுக்கிழமை (25) மதியம் 12.45 மணியளவில் மோதி புரண்டதில், 11 பேர் காயமடைந்து, சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்று கொடிகாமம் பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து கொடிகாமம் வரையில் பயணித்த தனியார் பஸ், வேகத்தை கட்டுப்படுத்த முடியாமையால் முன்பாக வந்து கொண்டிருந்த வானில் மோதியுள்ளது. விபத்தில் சிக்கி பஸ், வீதியோரத்தில் புரண்டுள்ளது.

சம்பவத்தில் காயமடைந்தவர்களில் சிறுவர்கள் இருவர் இருக்கின்றனர் என்று தெரிவித்த பொலிஸார், காயமடைந்தவர்களுக்கு பாரிய ஆபத்து எதுவுமில்லை என்றனர்.




## சமூகசெயற்பாட்டாளர் மீது இனந்தெரியாத நபர்கள் தாக்குதல்

■ செந்துரன் பிரதீபன்

இயையாணன், உடுப்பிட்டி பகுதியை சேர்ந்த தர்மலிங்கம் கஜேந்திரன் (வயது 30) என்ற இளைஞன் மீது இனம் தெரியாத நபர்கள் நடத்திய தாக்குதலில் காயங்களுக்கு உள்ளாகியுள்ளார்.

சமூக செயற்பாட்டாளரான தர்மலிங்கம் கஜேந்திரன், முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் கஞ்சி வார்ப்பை, பல்கலைக்கழகம் மாணவர்களுடன் முன்னின்று நடத்திச் சென்றமை மற்றும் பல்வேறு போராட்டங்களுக்கு ஆதரவாக செயற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

தற்போதைய சூழ்நிலையில், சமூக செயற்பாட்டாளர்கள் அரசாங்கத்தால் கைது செய்யப்படுவதுடன், இனம் தெரியாத நபர்களால் தாக்குதலுக்கு உள்ளாகும் சம்பவங்களும் இடம்பெற்று வருகின்றமை அவதானத்துக்குரியதாகும்.



## “பற்றாக்குறைகளால் உரிய சேவைகளை வழங்க முடியவில்லை”

### கிளிநொச்சி பஸ் டிப்போ நிர்வாகம் தெரிவிப்பு

■ சுப்பிரமணியம் பாஸ்கரன்

இலங்கை போக்குவரத்து சபையின் கிளிநொச்சி சாலைக்கு போதிய பஸ்களின்மை, ஆளணி மற்றும் பௌதீக வளங்களின் பற்றாகுறைகளால் உரிய சேவைகளை வழங்க முடியாது இருப்பதாக, சாலை நிர்வாகத்தால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் கோணாவில், யூனியன்குளம், அக்கராயன், இராமநாதபுரம், அழகாபுரி, திருவையாறு, கோரன்னகன் கட்டு, தட்டுவன்கொட்டி, ஆனையிறவு போன்ற பகுதிகளில், போக்குவரத்து வசதிகள் இன்மையால் பாடசாலை மாணவர்கள், பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டதை அடுத்தே டிப்போ நிர்வாகத்தால் மேற்படி தெரிவிக்கப்பட்டது.

கிளிநொச்சி டிப்போ நிர்வாகத்தால் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது; 64 சாரதிகள் தேவையான நிலையில் 37 சாரதிகள் உள்ளதாகவும் 64 காப்பாளர்கள் தேவையான போது, 39 காப்பாளர்கள் உள்ளதாகவும் ஒப்பந்த அடிப்படையில் 12 பேர் காப்பாளர்களாக நியமிக்கப்பட்டு சேவைகள் முன்னெடுக்கப்படுவதாகவும் பொறியியல் பகுதியில் 10 பேர் தேவையான நிலையில் ஐந்து பேர் மாத்திரம் கடமையாற்றி வருவதாகவும் தற்போது சேவையில் ஈடுபடுகின்ற பஸ்கள் 20 வருடங்களுக்கு மேலாக பயன்படுத்தி வருவதால் அவை அடிக்கடி பழுதடையும் நிலைமையும் காணப்படுவதாதகவும் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன், தற்போது 28 பஸ்கள் மாத்திரமே இருப்பதாகவும் பாடசாலை சேவைகளாக நான்கு சேவைகளும் பயணிகள் - மாணவர்கள் இணைந்த சேவையாக மூன்று சேவைகளும் உள்ளூர் சேவைகளுக்காக 18 பஸ்களும் வெளி மாவட்டத்துக்கான மூன்று சேவைகளும் மேற்கொள்ளப்படுவதாகவும் இவ்வாறான நிலையில் மேலதிக சேவைகளை ஆரம்பிக்க முடியாத நிலைமை காணப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## காத்தான்குடிக்கு ஆளுநர் விஜயம்

■ நூருல் ஹுதா உமர்

காத்தான்குடியில் அமைந்துள்ள மஸ்ஜிதுல் அக்ஸா பள்ளிவாயலுக்கு கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் சென்று தரிசித்ததுடன் தமிழ் மொழிபெயர்ப்புடன் கூடிய குர்ஆன் பிரதி பள்ளிவாயல் கதீபால் வழங்கி வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் பள்ளிவாயல் நிர்வாகிகள், கிழக்கு மாகாண சுற்றுலாத்துறை பணியகத்தின் பணிப்பாளர் ஏ.பி மதன், பிரதேச செயலாளர் உ. உதயசிறிதர், காத்தான்குடி நகரசபை செயலாளர் றிப்ஹா சபீன், காத்தான்குடி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி உட்பட பெருந்திரளான மக்கள் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து காத்தான்குடியை அழகுபடுத்தும் நோக்கில் நடப்பட்ட பேரீச்சம் பழ இவ்வருட அறுவடையை கிழக்கு மாகாண ஆளுநர் வைபவரீதியாக ஆரம்பித்து வைத்ததுடன் முதலாவது அறுவடையை காத்தான்குடி நகரசபை செயலாளர் றிப்ஹா சபீனிடமிருந்து பெற்றுக் கொண்டார்.



## அக்குறணையில் ஆயுத களஞ்சியசாலை; இருவர் கைது

அலவத்துகொட பொலிஸாருக்கு கிடைத்த தகவல்களின் அடிப்படையில் அக்குறணை, துனுவில பிரதேசத்தில் வீடொன்றை சுற்றிவளைத்து மேற்கொள்ளப்பட்ட தேடுதலில் பல ஆயுதங்கள் மற்றும் போதைப்பொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

ரி-56 ரவைகள் 11, அலைபேசிகள் 29, இராணுவ ஜெக்கெட், ஹெரோய்ன் 2,070 மில்லி கிராம், தடை செய்யப்பட்ட கத்திகள் 7 மற்றும் 17,040 ரூபாய் பணம் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன. அத்துடன் சந்தேகத்தின் பேரில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தச் சுற்றிவளைப்புத் தேடுதல் சனிக்கிழமை (24) இரவு 11 மணியளவில் முன்னெடுக்கப்பட்டன. கைது செய்யப்பட்ட நபருடன் இருந்த பிரதான சந்தேகநபர், இராணுவத்தில் இருந்து ஓய்வு பெற்றவர் என்றும் தீகல பிரதேசத்தை வசிப்பிடமாகக் கொண்டவர்கள் என்பதும் விசாரணைகளின் ஊடாக கண்டறியப்பட்டுள்ளது.

பிரதான சந்தேகநபரான 43 வயதான நபர், ஈசி காஸ் முறைமையின் ஊடாக போதைப்பொருள் விநியோகிக்கும் நபர் என்றும் அறியமுடிகின்றது. அவரிடமிருந்த கைக்குண்டு கொழும்பு பிரதேசத்தில் உள்ள நபரொருவரிடம் இருந்து விலைக்கு கொள்வனவு செய்யப்பட்டுள்ளது என்பது விசாரணைகளின் ஊடாக கண்டறியப்பட்டுள்ளது.

ஆகையால் அவரை தடுத்துவைத்து விசாரணைக்கு உட்படுத்துவதற்கான நீதிமன்ற அனுமதியைப் பெற்று, மேலதிக விசாரணைகளை முன்னெடுக்கவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

## மின்சாரம் தாக்கி முதியவர் பலி

யாழ்ப்பாணம், இளவாலை பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட பெரியவிளான் பகுதியில் மின்சாரம் தாக்கி 60 வயதான செந்தில்நாதன் செந்தமிழ்ச்செல்வி என்ற பெண்ணொருவர் சனிக்கிழமை (24) உயிரிழந்துள்ளார்.

வீட்டில் உள்ளவர்கள் வெளியே சென்றிருந்த நிலையில், குறித்த பெண் தண்ணீர் இறைப்பதற்கு மோட்டாரை இயக்க முற்பட்டபோதே இந்த அனர்த்தம் நிகழ்ந்துள்ளது. உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

மட்டு – கொழும்பு ரயில் பயணிகளுக்கு

## விசேட பஸ் சேவை

■ ரீ.எல் ஜவ்பர்கான்

கொழும்பு, கோட்டை ரயில் நிலையத்தில் இருந்து மாலை 3.00 மணிக்கு மட்டக்களப்பு நோக்கிப் புறப்படும் கடுகதி ரயிலில் பயணிக்கும் பயணிகளின் நன்மை கருதி, மட்டக்களப்பு ரயில் நிலையத்திலிருந்து அக்கரைப்பற்றுக்கான இரவு நேர பஸ் சேவை மட்டக்களப்பு டிப்போவால் சனிக்கிழமை (24) ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு ரயில் நிலையத்தில் இருந்து இரவு 10.30 மணிக்கு புறப்படும் இப்பஸ்சேவை காத்தான்குடி, ஆரையம்பதி, களுவாஞ்சிக்குடி, கல்முனை, காரைதீவு, நிந்தவூர், அட்டாளைச்சேனை ஊடாக அக்கரைப்பற்றை அடையவுள்ளது.

குறித்த பஸ் சேவையை ரி.எம்.வி.பி கட்சியின் செயலாளர் பி. பிரசாந்தன் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு ஆரம்பித்து வைத்தார். நிகழ்வில் மட்டக்களப்பு டிப்போ முகாமையாளர் கே.சிறீதரன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## மீனவர்களுக்கு உதவி

வடக்கு - கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் நிதி அனுசரணையில் AHRC, PCCJ ஆகிய நிறுவனங்களின் ஏற்பாட்டில் மூதூர், கட்டைபறிச்சான் கிராமத்தில் இறால் மீன்பிடி தொழிலில் ஈடுபடும் மீனவர்களை ஊக்குவித்து, அவர்களுடைய வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் 40 மீனவர்களுக்கான மீன்பிடி உபகரணங்கள் வெள்ளிக்கிழமை (23) வழங்கி வைக்கப்பட்டதோடு அவர்களது உணவுத் தேவையை பூர்த்தி செய்யும் முகமாக, தலா 2,500 ரூபாய் பெறுமதியான உலர் உணவுப் பொதிகள் ஞாயிற்றுக்கிழமை (25) வழங்கி வைக்கப்பட்டன.



## மகாவலி கங்கையில் மூழ்கிய மாணவன் மரணம்

கண்டி, தென்னக்கும்புர பாலத்துக்கு அருகில் மகாவலி கங்கையில் நீராடிக்கொண்டிருந்த பாடசாலை மாணவர்கள் இருவரில் ஒருவர் நீரில் மூழ்கி மரணமடைந்துள்ளார். மற்றையவர் காப்பாற்றப்பட்டு, வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இவ்விருவரும் கண்டியில் உள்ள பிரதான பாடசாலையில் கற்கின்ற 15 வயதுடைய மாணவர்கள் ஆவர். காப்பாற்றப்பட்ட மாணவன் அம்பிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்தவர் என்று தெரிவித்த பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தனர்.



## பாதுகாப்பு அதிகாரிகள் எனக் கூறி கொள்ளை

■ சுமணசிறி குணத்திலக்க

தங்களை பாதுகாப்பு அதிகாரிகள் எனக்கூறிக்கொண்டு வீட்டுக்குள் புகுந்த ஏழு பேர் அடங்கிய குழு, அவ்வீட்டில் இருந்த 16 இலட்சம் ரூபாய் பணம் மற்றும் தங்க நகைகளை கொள்ளையடித்துக்கொண்டு தப்பிச் சென்றுவிட்டது. இந்தச் சம்பவம் மொனராகலை பிரதேசத்திலேயே இடம்பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிள் விற்பனை செய்யும் வர்த்தகர் ஒருவரின் வீட்டிலேயே தங்களுடைய கைவரிசை, கடந்த 23 ஆம் திகதியன்று காண்பித்துள்ளனர்.

சம்பவ தினத்தன்று இரவு 9.30 க்கு வீட்டுக்கு வந்த குழுவொன்று, பாதுகாப்பு அமைச்சின் அதிகாரிகள் அணியும் ஆடைக்கு ஒத்த ஆடைகளை அணிந்திருந்தனர். அவர்களில் ஐவர், வீட்டுக்குள் ஆங்காங்கே நின்று கொண்டனர்.

ஏனைய இருவர், வீட்டில் தொல்பொருள்கள் மறைத்து வைத்துள்ளதாக தகவல் கிடைத்துள்ளது. ஆகையால், வீட்டை பரிசோதனைக்கு உட்படுத்த வேண்டுமென கூறியுள்ளனர். அத்துடன் பாதுகாப்பு அமைச்சின் அதிகாரிகள் எனக் கூறி அடையாள அட்டையையும் காண்பித்துள்ளனர்.

வீட்டை சோதனையிடுவதற்கு இணக்கம் தெரிவித்ததை அடுத்து, சுமார் இரண்டுமணிநேரம் வீட்டுக்குள்ளும் வெளியிலும் சோதனை நடத்திய அக்குழுவினர், அலுமாரியில் இருந்த நகைகள் மற்றும் பணத்தை கொள்ளையிட்டுச் சென்றுவிட்டார். இதுதொடர்பில் வீட்டின் உரிமையாளர் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

யாழ். பல்கலைக்கழகத்தில் இடம்பெறும்

## சிங்களமயமாக்கல் தொடர்பாக மாணவர் ஒன்றியம் கடிதம்

■ நிதர்சன் வினோத்

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் இடம்பெறும் தமிழர் விரோத சிங்களமயமாக்கல் செயற்பாடுகள் தொடர்பாக, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் கடிதமொன்றை துறைத்தலைவர்கள், பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் ஊடாக பல்கலைக்கழக பீடாதிபதிகளுக்கு அனுப்பிவைத்துள்ளது.

அக்கடிதத்தில், தமிழ் மக்களின் கூட்டு உணர்வுகளோடு தொடர்புடைய தினங்களில் களியாட்டங்கள், கொண்டாட்டங்களுக்கு ஒப்புதல் வழங்குவதையும் அவற்றை முன்னெடுப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்வதையும் தவிர்க்குமாறும், அன்றைய தினங்களில் பல்கலைக்கழக நாட்காட்டியில் நிகழ்வுகள் இடம்பெறாமையை உறுதி செய்யுமாறும் வேண்டிக் கொள்கிறோம்.

அண்மையில்க் கூட, தமிழ் மக்களின் உணர்வுகளைப் உதாசீனப்படுத்தி அவமதிக்கும் விதத்தில் நிகழ்வொன்று, இராணுவப் பிரசன்னத்தோடு இடம்பெற்றிருந்தது. அது தமிழ் மக்களின் ஆறாத மனங்களை மேலும் புண்படுத்தி இருந்தது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் திட்டமிட்டு இடம்பெறும் மறைமுகமான சிங்களமயமாக்க முயற்சிகளால், தமிழ் மாணவர்களுக்கு பாதிப்புகள் ஏற்படாமையை உறுதி செய்யுமாறும் தமிழ் மக்களின் உரிமைப் பயணத்தில் பலமான குரலாக ஒலித்துக் கொண்டிருக்கும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் குரலை நசுக்கும் விதமாக பெரும்பாண்மையின மாணவர்கள் உள்நுழைக்கப்படும் சூழலில் அவர்கள் பெரும்பான்மையைக் கைப்பற்றுவதன் ஊடாக, தமிழ் மாணவர்களுக்குரிய தலைமைத்துவ வாய்ப்புகள் யாவும் பறிக்கப்படுவதற்கான சூழல் எழுந்துள்ளது. இதனால் இலங்கையில் உள்ள பல்கலைக்கழகங்களில் தமிழ் மாணவர்களுக்கு என்றிருக்கும் இறுதியான ஒரேயொரு வாய்ப்பாக இருக்கும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமும் இழக்கப்படும் சூழல் திட்டமிட்டு உருவாக்கப்படுகிறது.

தாயகத்தில் இடம்பெறும் பௌத்த - சிங்களமயமாக்கலுக்கு எதிராக, யாழ். பல்கலைச் சமூகம் போராடி வருகையில், எமது விரிவுரையாளர்களே பல்கலையினுள் சிங்களமயமாக்கலை முன்னெடுக்கும் சூழல் உருவாகுமேயானால் அது ஒரு முரணான செயலாகும் என்றுள்ளது.

# சில்லறைகளை விழுங்கும் நடத்துநர்களும் டிஜிட்டல் முறைமையும்

பொதுப் போக்குவரத்து பயணிகள் முகங்கொடுக்கும் 'சில்லறை' பிரச்சினைக்குத் தீர்வு காணாவிடின், நடத்துநர்களுக்கும் பயணிகளுக்கும் இடையில் ஏற்படும் வாய்த்தர்க்கத்தை தவிர்க்க முடியாது. இதுவே சிலவேளைகளில் கைகலப்பாக மாறி, உயிர்களுக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தவோ, அல்லது இரு தரப்பினரும் காயங்களுக்கு உள்ளாவதற்கோ வழிசமைத்து விடும்.

தூர பிரதேசங்களுக்கு சேவையில் ஈடுபடும் பொதுப் போக்குவரத்தில், இவ்வாறான பிரச்சினைகள் சற்று குறைவு. எனினும், குறுகிய தூர சேவைகளில் ஈடுபடும் பஸ்களில் இந்தச் சில்லறை பிரச்சினை பெரும் பிரச்சினையாகவே இருக்கின்றது.

நடத்துநரிடம் போதியளவில் சில்லறை காசுகள் இருக்காது. பயணிகள் சில்லறை காசுகளைக் கொடுத்தாலும் அதனை ஏற்றுக்கொள்ளும் மனப்பாங்கு ஒரு சில நடத்துநர்களுக்கு இல்லை. இதுவே, நடத்துநருக்கும் பயணிகளுக்கும் இடையில் வாய்த்தர்க்கத்தை ஏற்படுத்துகின்றது.

பயணிகள் முகங்கொடுக்கும் இந்தப் பிரச்சினைக்கு டிஜிட்டல் முறை, சிறந்த தீர்வாக அமையும். இரண்டொரு வருடங்களுக்கு முன்னர் அறிமுகப்படுத்தப்பட்ட 'டிஜிட்டல் காட்' முறைமையின் ஊடாக, பெரும்பாலான பயணிகள் நன்மையடைந்தனர். அத்துடன் இந்தச் சில்லறை பிரச்சினையும் வரவில்லை. தற்போது அந்த 'காட்' முறைமையும் காணாமல் போய்விட்டது.

உலக நாடுகள் பலவற்றுடன் ஒப்பிடும் போது, எமது பொதுப் போக்குவரத்துச் சேவை டிஜிட்டல் மயமாக்கலில் பின்தங்கியே நிற்கின்றது. இந்நிலையில், அதிவேக நெடுஞ்சாலைகளில் சேவையில் ஈடுபடும் இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ்களில் நடத்துநர் இன்றி, சேவையை முன்னெடுக்க அரசாங்கம் அண்மையில் திட்டமிட்டிருந்தது.

இதேநேரத்தில், இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சாரதிகள் சிலரையும் நடத்துநர்கள் சிலரையும் நியமனம் செய்வதற்கான யோசனையும் முன்வைக்கப்பட்டுள்ளது. பொதுப் போக்குவரத்தில் ஏற்பட்டிருக்கும் இவ்வாறான பிரச்சினைகளை முழுமையாக இனங்கண்டு, அதற்குரிய சரியான தீர்வை எட்டுவதற்கு அரசாங்கம் முயற்சித்தால், இவ்வாறான சில்லறை பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க வேண்டியதில்லை.

அதுமட்டுமன்றி, இடைத்தரகராக இருக்கும் நடத்துநர், அரசாங்கத்துக்கு கிடைக்கும் வருமானத்தையும் பயணிகள் இழக்கும் சில்லறையையும் சுருட்டிக்கொள்வதற்கு வாய்ப்பிருக்காது. டிஜிட்டல் முறைமை அறிமுகப்படுத்தப்படுமாயின், இலங்கை போக்குவரத்துச் சபையில், நடத்துநர் பதவியை எதிர்பார்த்திருப்போருக்கு வேலைவாய்ப்பு இல்லாமல் போகும்.

நடத்துநர் இன்றிய சேவையை முன்னெடுத்தால், எத்தனை பயணிகள் உண்மையாக மனசுத்தியுடன் செயற்பாடுவார்கள் என்பதெல்லாம் கேள்விக்குறி. அதனை தடுப்பதற்கு வீதி பரிசோதனைகளை அதிகரித்து, பயணச்சீட்டை பெறாமல் பயணிக்கும் பயணிகளிடமிருந்து அறவிடும் தண்டப்பணத்தை அதிகரிக்கவேண்டும்.

சாரதியை மட்டுமே வைத்துக்கொண்டு பொதுப் போக்குவரத்து சேவையை முன்னெடுப்பது கடும் சிரமமான காரியமாகும். எனினும், குறிப்பிட்ட நேரத்துக்குள், குறித்த இடத்தை பஸ்கள் சென்றடைவதில் தாமதம் ஏற்படும் என்பதையும் நினைவில் கொள்ள வேண்டும்.

எனினும், தொழில்நுட்ப துறையுடன் ஓடிக்கொண்டிருக்கும் போது, முடியாதது எதுவுமல்ல. அதனை இதயசுத்தியுடன் செயற்படுத்தவும் அமல்படுத்தவும் சகலரும் திடசங்கட்பம் பூண வேண்டும்.




தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk







## வாழ்வியல் தரிசனம்

'விட்டுவிடுதல்' என்பது மிக ஆழமான வார்த்தைதான். ஆசை, கோபம், குரோதம், மாயை, கர்வம், அகங்காரம் போன்ற பலவற்றை விட்டுவிட்டால், வாழ்க்கை இனிக்கும். தகாத எதையும் விட்டுவிடுதல் சிறப்பான ஒழுக்கமாகும்.

எல்லா ஆசைகள், அர்த்தமற்ற எண்ணங்கள், குரோதங்களை வளர்த்தால், எந்தக் கெட்ட செயல்களையும் விட்டுவிட முடியாது. அன்பு, அகிம்சை, உயிர்களை நேசித்தால், செயற்படுத்தினால், எல்லா நல்ல வரவுகளையும் இறைவன் யாவருக்கும் அளித்துவிடுவான்.

ஆசைகளுடன் மோகம், பொறாமை எல்லாமே தமக்கானது என எண்ணினால், பிறப்பின் அர்த்தம் என்ன?

பொய்யான வாழ்வு எவரையும் திருப்திப்படுத்த இயலாது. முழு உயிர்களுமே இறைவன் படைப்பு என்பதை அநேகர் உணர்வதில்லை.

தமது வாழ்வு, தமது குடும்பம் மட்டுமே என சுயநல எண்ணம் விடுத்து, உலகம் முழுவதுமே சகல உயிர்களுக்கும் பொதுவானது என உணர்க!

–பருத்தியூர் பாலா. வயிரவநாதன்

# ஒரே இரவில் தீர்வு?




என். கே அஷோக்பரன்
Twitter: @nkashokbharan


கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ், வலைத்தளத்தில் எழுதிவரும் 'உரலார் கேள்வியும் உலக்கையார் பதிலும்' என்ற கேள்வி - பதில் தொடரில், அண்மையில் கேட்கப்பட்டிருந்த, 'ரணில் இனப்பிரச்சினைக்கு தீர்வுகண்டுவிவார் போல இருக்கிறதே' என்ற கேள்விக்கு, 'ஏறச்சொன்னால் கழுதைக்குக் கோபம்; இறங்கச் சொன்னால் முடவனுக்குக் கோபம்' என்ற நிலையில்த்தான், நமது இனப்பிரச்சினைக்கான தீர்வு முயற்சிகள் பலகாலமாய் நடந்து கொண்டிருக்கின்றன' என்று தனது பதிலில் குறிப்பிட்டு இருந்தமை, கவனத்தை ஈர்ப்பதாக அமைந்திருந்தது.

இலங்கையின் இனப்பிரச்சினைக்கான தீர்வு, இலங்கை அரசாங்கம், தமிழ்த்தேசம் ஆகிய இருதரப்பினரிடையே ஏற்பட வேண்டுமாயின், இருதரப்பும் சமரசங்களுக்கும் விட்டுக்கொடுப்புகளுக்கும் தயாராக இருக்க வேண்டும். அது நடக்காத வரை, தீர்வு என்பது சாத்தியமில்லை.

ஆனால், இங்குதான் சூட்சுமமானதொரு நுட்பம் இருக்கிறது. இந்தச் சமரசங்களும் விட்டுக்கொடுப்புகளும் ஒரே இரவில் நடந்துவிட வேண்டுமென்ற அவசியம் இல்லை. அப்படி எதிர்பார்ப்பதும் யதார்த்தமானது இல்லை. ஆனால், நடைமுறையில் தமிழ்த் தேசிய அரசியலின் பிரச்சினை, இங்குதான் தொடங்குகிறது.

தமிழ்த் தேசிய அரசியல்வாதிகள், தங்களுடைய மக்களாதரவைத் தக்கவைத்துக் கொள்வதற்காக, அதீத பகட்டாரவாரப் பேச்சுகளையும் கொள்கை நிலைப்பாடுகளையும் முன்வைக்கிறார்கள். இதன் விளைவாக, தீர்வு காண்பதில் சமரசம் அல்லது விட்டுக்கொடுப்பு என்ற பேச்சுக்கே இடமில்லாமல் போய்விடுகிறது.

ஏனென்றால், இன்று தமிழ்த் தேசிய அரசியல் பேசும், ஒன்றோடொன்று போட்டிபோடும் கட்சிகளும், ஒருவரோடொருவர் போட்டிபோடும் அரசியல்வாதிகளும் உளர். அதி தீவிர தேசியவாதப் பகட்டாரவார நிலைப்பாட்டில் இருந்து இம்மியளவேனும் பிசகினாலும் போட்டிக் கட்சி அல்லது போட்டியாளர் 'துரோகி' முத்திரை குத்தி, அரசியல் எதிர்காலத்தை சூனியமாக்கிவிடுவாரோ என்ற பயத்திலேயே சமரசம், விட்டுக்கொடுப்பு ஆகியன பற்றி பேசக்கூட முடியாத சூழ்நிலையில், சமரசத்தின் பாலான தீர்வை விரும்பும் தமிழ்த் தேசிய அரசியல்வாதிகள் கூட, சிக்கி நிற்கிறார்கள் என்பதுதான் யதார்த்தம்.

எந்தப் பிரச்சினைக்குமான அரசியல் தீர்வு என்பது, ஒரே இரவில் ஏற்பட்டுவிடாது. முழுமையான தீர்வு கிடைக்கும் வரை, இருந்த இடத்திலேயே இருப்போம்; முழுமையான தீர்வை நோக்கி ஓர் அடி கூட நகரமாட்டோம் என்பது அடிமுட்டாள்தனமான அரசியல்.

ஆனால், எங்கே அதைச் செய்யாவிட்டால் துரோகி என முத்திரை குத்தி, அரசியல் எதிர்காலத்தை அஸ்தமனமாக்கிவிடுவார்களோ என்ற பயத்தால் அரசியல் யதார்த்தம் புரிந்தவர்கள் கூட அமைதியாக இருக்கிறார்கள்.

தமிழ்த் தேசிய அரசியலில் இருக்கும் இதே பிரச்சினைதான், சிங்கள-பௌத்த தேசிய அரசியலிலும் இருக்கிறது. எங்கே தீர்வு தொடர்பில் சின்ன சமரசத்தை முன்வைத்தாலும், நாட்டைத் தமிழர்களுக்கு தாரைவார்த்துவிட்ட துரோகி என்று முத்திரை குத்திவிடுவார்களோ என்ற பயத்திலேயே சிங்கள இன அரசியல்வாதிகள் இருக்க வேண்டியதாக இருக்கிறது. இந்த விடயத்தில் தமிழ்த் தேசியமும் சிங்கள-பௌத்த தேசியமும் ஒரே மாதிரித்தான் இருக்கின்றன.

இங்கு இன்னொரு கலாதியான உதாரணம் இருக்கிறது. இன்றைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை, தீவிர தமிழ்த் தேசியவாதிகளும் 'நரி' என்கிறார்கள்; சிங்கள-பௌத்த தேசியவாதிகளும் அவ்வாறே அணுகுகிறார்கள். இத்தனைக்கும் இந்நாட்டில் இனப்பிரச்சினை ஒன்று இருக்கிறது; அது தீர்க்கப்பட வேண்டும் என்று பகிரங்கமாகச் சொன்ன ஒரேயொரு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மட்டும்தான்.

இவ்வளவு ஏன்? இப்போதுள்ள பிரதான அரசியல் கட்சி தலைவர்களில் வேறு எவராவது இலங்கையில் இனப்பிரச்சினை இருக்கிறது; அது தீர்க்கப்பட வேண்டும் என்ற தொனியிலாவது பேசியிருக்கிறார்களா? அவர்களால் பேச முடியாது. அதுதான் தீவிர இன-மத தேசியவாத அரசியல் கிடுகுப்பிடி. அதிலிருந்து தப்ப முடியாதளவுக்கு இலங்கையின் அரசியல்வாதிகள் சிக்கிப்போய்க்கிடக்கிறார்கள்.

சரி! ரணில் தீர்வு பற்றி பேசுகிறார்; அவரோடு பேசி, இன்று கிடைப்பதை எடுத்துக்கொண்டு, அதனை மக்களின் மேம்பாட்டுக்காகப் பயன்படுத்திக்கொண்டு, எதிர்காலத்தில் மேன்மேலும் கோரிக்கைகளை முன்வைத்து, எமது அரசியல் இலக்கு நோக்கிப் பயணிப்போம் என்று யோசிப்பதற்குக் கூட, இங்கு ஒரு தமிழ் அரசியல்வாதியும் கிடையாது. அப்படி இருந்தவர்கள் கூட, எங்கே தாம் 'துரோகி' முத்திரை குத்தப்பட்டு, அரசியலில் செல்லாக்காசாகி விடுவோமோ என்று பயந்து கொண்டிருக்கிறார்கள்.

ஒரு பயணத்தின் இறுதிக் கோட்டை அடைய வேண்டுமானால், ஒவ்வோர் அடியாக வைத்துத்தான் போக முடியும். ஒரே பாய்ச்சலில் இறுதிக் கோட்டை அடைவதானால் அடைவேன்; இல்லையென்றால் நிற்கும் இடத்திலேயே நின்று கொண்டிருப்பேன் என்பது என்ன வகையான அரசியல்?

தமிழ்த் தேசிய அரசியல் என்பது, ஒரேயடியாக ஒரே இரவில் தாம் விரும்பும் தீர்வொன்றைப் பெறும் எண்ணப்பாட்டில் இருந்து, படிப்படியாகக் கொஞ்சம் கொஞ்சமாக நீண்ட காலத்தில் தமது அபிலாஷைகளை அடைந்துகொள்ளும் '*incrementalism*' எனும் பாதைக்கு மாற வேண்டும். இதற்கான சமிக்ஞைகள் கடந்த ஐந்து முதல் எட்டு ஆண்டு காலத்தில் தென்பட்ட போதும், அது அரசியல் முன்னரங்குக்குக் கொண்டு வரப்படவில்லை என்பது ஒட்டு மொத்தத் தமிழ் மக்களின் தோல்வி.

அரசியல் ஆய்வுப் பரப்பை அவதானித்த வரையில், அரசியல் மாற்றங்கள் என்பவை நீண்டகாலத்தில் கொஞ்சம் கொஞ்சமாக அதிகரிக்கும் '*incrementalism*' எனும் வகையில்தான் ஏற்பட்டு இருக்கின்றன. இதுதான் நியமம் என்கிற பேராசிரியர் போல் கேர்ணியின் கருத்தை நாம் கவனிக்கலாம். ஓர் அரசியல் கொள்கை நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென்றால், அதற்கு மிக நீண்ட காலம் தேவை; பல தசாப்தங்கள் தேவை. இதுதான் அரசியல் யதார்த்தம்.

ஸ்கொட்லாந்து என்பது, '*incrementalism*' மூலமான அதிகாரப்பகிர்வுக்கு ஓர் உதாரணமாகத் திகழ்கின்றது. ஸ்கொட்லாந்துக்கான அதிகாரப்பகிர்வை அவதானிக்கும் போது, '*incrementalism*' அணுகுமுறையின் நடைமுறை இயக்கத்தை அவதானிக்கலாம்.

ஸ்கொட்லாந்தின் அதிகாரப்பகிர்வை நோக்கிய பயணமானது நீண்ட வரலாற்றை உடையது. 20ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில், தமக்கான சுயாட்சி மற்றும் சுய-ஆட்சிக்கான கோரிக்கை ஸ்கொட்லாந்தில் முக்கியத்துவம் பெற்றது. இந்த வளர்ந்து வரும் உணர்வுக்கு பதிலளிக்கும் விதமாக, பிரித்தானிய அரசாங்கம் 1998 ஆம் ஆண்டின் ஸ்கொட்லாந்து சட்டத்தை அறிமுகப்படுத்தியது. இது ஸ்கொட்லாந்து பாராளுமன்றத்தையும் ஸ்கொட்லாந்து நிர்வாகத்தையும் ஸ்தாபித்தது.

ஆனால், ஸ்கொட்லாந்து தேசியம் வேண்டிய பல அதிகாரங்கள் அதற்கு இருக்கவில்லை. அதற்காக ஸ்கொட்லாந்து தேசியவாதிகள் அதனை நிராகரிக்கவில்லை. அதனை ஏற்றுக்கொண்டு, தொடர்ந்தும் தமது கோரிக்கைகளை முன்னெடுத்தார்கள்.

இந்தப் பயணத்தின் அடுத்த கட்டமாக, ஸ்கொட்லாந்து சட்டம் 2012 ஸ்கொட்லாந்து பாராளுமன்றத்துக்கு கல்வி, சுகாதாரம், நீதி போன்ற பல்வேறு கொள்கை பகுதிகளில் சட்டம் இயற்றும் அதிகாரத்தை வழங்கியது. தொடர்ந்து, ஸ்கொட்லாந்து சட்டம் 2016 ஆனது, 2014 இல் ஸ்காட்டிஷ் சுதந்திர வாக்கெடுப்பைத் தொடர்ந்து, மேலும் அதிகரித்த அதிகாரப்பகிர்வை வழங்கியது. இந்தச் சட்டம் வருமான வரி விகிதங்கள், பட்டைகள் போன்ற கூடுதல் கொள்கைப் பகுதிகள் மீதான அதிகாரத்தை ஸ்கொட்லாந்து பாராளுமன்றத்துக்கு வழங்கியது.

இந்த அணுகுமுறை, ஸ்கொட்லாந்து சுய-ஆட்சியின் பரிணாம வளர்ச்சிக்கு அனுமதித்தது. அரசியல் சுயாட்சி, பொறுப்புக்கூறல் உணர்வை வளர்த்தது. பெரும்பான்மை ஸ்கொட்லாந்து மக்கள், இந்தமுறையை நம்பியதன் விளைவுதான் 2014இல் ஸ்கொட்லாந்து பிரிவினைக்கான வாக்கெடுப்பில் ஐக்கிய இராச்சியமாக தொடர்வதற்கான ஆணையை ஸ்கொட்லாந்து மக்கள் வழங்கியிருந்தார்கள். இலங்கையர்கள் இதிலிருந்து கற்றுக்கொள்ள நிறைய இருக்கிறது.

ஆகவே, ஒரே இரவில் தீர்வு வேண்டும் என்று யோசிப்பதே அறிவுக்கு முரணானது. விட்டுக்கொடுப்புகள் என்பவை காலத்தின் தேவைக்கானது. அவை நிரந்தரமானவை என்று எவரும் முடிந்த முடிவுகளுக்கு வரத்தேவையில்லை. இந்த மனநிலைமாற்றம் என்பது, தமிழ்த் தேசிய அரசியலுக்கு மிக முக்கியமானது. தாழ்வுச்சிக்கல், அல்லது உயர்வுச்சிக்கல் என்ற மனநிலைகளிலிருந்து இனப்பிரச்சினைக்கான தீர்வு என்பது அணுகப்படக்கூடாது. மாறாக, யதார்த்தமான, சமயோசிதமான, அறிவுபூர்வமான மனநிலையிலிருந்து இனப்பிரச்சினைக்கான தீர்வு அணுகப்பட வேண்டும்.

இன்று நீங்கள் விதை போடுங்கள்; நாளைய தலைமுறை வளரும் கன்றுக்கு தண்ணீர் பாய்ச்சட்டும். அதற்கடுத்த தலைமுறை, வளரும் மரத்தைப் பாதுகாக்கட்டும். அப்படிச் செய்தால் அதற்கடுத்த தலைமுறை பழத்தை ருசிக்கலாம். இல்லை எனக்கு பழம் கிடைப்பதாக இருந்தால்தான் நான் எதையும் செய்வேன் என்று யோசித்தால், பூச்சியத்துக்குள் ஓர் இராச்சியத்தை கற்பனையில் கட்டி வாழ வேண்டியதுதான்.

## கடிதங்கள்

### 25 குடும்பங்கள் பாதிப்பு

நோட்டன் பிரிஜ் விமலசூரிய நீர்த்தேகத்தில், சேரும் குப்பைகள், சேறு மற்றும் மணலை அகற்றும் வேலைத்திட்டம் நிறுத்தப்பட்டதால், அதனை நம்பி வாழ்த்த 25 குடும்பங்கள் பெரும் சிரமங்களுக்கு உள்ளாகியுள்ளன.

இந்த வேலைத்திட்டம் இலங்கை மின்சார சபையால் முன்னெடுக்கப்பட்டது. அத்திட்டம் திடீரென நிறுத்தப்பட்டமையால், அதனை நம்பி, தங்களுடைய ஜீவனோபாயத்தை நடத்திச் சென்ற 25 குடும்பங்களைச் சேர்ந்தவர்களே இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளனர்.

மத்திய சுற்றாடல் அதிகார சபை, சுரங்க மற்றும் புவியியல் பணியகம், பாதுகாப்பு அமைச்சு, கினிகத்ஹேன பிரதேச செயலாளர் காரியாலயம் ஆகிய அரச நிறுவனங்களின் அனுமதி மற்றும் உரிமங்களுக்கு அமையவே, பல காலமாக இச்செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன.

அகழ்ந்தெடுக்கப்படும் மணல், அரச நிறுவனங்களின் அபிவிருத்திக்காக குறைந்த விலைக்கு வழங்கப்பட்டதாகவும், புதிதாக நியமிக்கப்பட்டுள்ள லக்ஷபான நீர் மின்நிலைய வளாகத்தின் பிரதி இணை ஆணையாளர் அத்திட்டத்தை தற்காலிகமாக நிறுத்தியுள்ளதாகவும் பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவித்தனர்.

சுற்றுச்சூழலுக்கு பாதிப்பில்லாத வகையில் முன்னெடுக்கப்பட்டுள்ள இத்திட்டத்தை, மீண்டும் ஆரம்பிப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பாதிக்கப்பட்ட மக்கள் ஜனாதிபதி மற்றும் மின்சார அமைச்சரிடம் எழுத்து மூலம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ரஞ்சித் ராஜபக்ஷ



# SLT-MOBITEL இசைத் துறையில் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது




SLT-MOBITEL, இலங்கையின் முதலாவது தொழில்நுட்ப வலுவூட்டப்பட்ட பிரத்தியேகமான திறன் கட்டமைப்பான mStudio ஐ அறிமுகம் செய்துள்ளது. தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி இசைக் கலைஞர்கள் மற்றும் கலைஞர்களின் எதிர்பார்ப்புகளுக்கு வலுச் சேர்க்கும் வகையில் இந்த அறிமுகம் அமைந்துள்ளது. One Galle Face இன் PVR Cinemas இல் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த அறிமுக நிகழ்வில், தொலைக்காட்சி மற்றும் இசைத் துறையைச் சேர்ந்த பிரபலங்கள் பலரும் கலந்து கொண்டனர்.

டிஜிட்டல் உள்ளடக்கத்தை ஊக்குவிக்கும் வகையில் SLT-MOBITEL இனால் மேற்கொள்ளப்படும் பரந்தளவு செயற்பாடுகளில் ஓர் அங்கமாக mStudio அறிமுகம் அமைந்துள்ளது. பரந்தளவு பின்புலங்களைக் கொண்ட நபர்களுக்கு வலுச்சேர்ப்பதை அடிப்படையாகக் கொண்டு அறிமுகம் செய்யப்பட்டுள்ள mStduio இனால், இலங்கையர்களுக்கு தரமான இசையை தயாரிப்பது, உருவாக்குவது மற்றும் அனுபவிப்பதற்கு வாய்ப்பளிக்கப்படும். mStudio Online, mStudio Talent, mStudio Live, mStudio Unplugged ஆகிய நான்கு பகுதிகளை mStudio கொண்டிருக்கும். இதனூடாக, இசை அனுபவிக்கப்படுவது, பகிரப்படுவது, கொண்டாடப்படுவதில் புத்தாக்கமான மாற்றத்தை ஏற்படுத்திக் கொடுக்கும் வகையில் அமைந்திருக்கும்.

mStudio இன் வெற்றியின் பின்னணியில், SLT-MOBITEL இன் நவீன 5G வலையமைப்பு தங்கியுள்ளது. இந்த நவீன தொழில்நுட்பம் முதுகெலும்பாக அமைந்திருப்பதுடன், எதிர்பார்ப்புகள் நிறைந்த இசைக் கலைஞர்களை தமது இரசிகர்களுடன் இணைப்பதுடன், தமது முழு ஆற்றலையும் வெளிப்படுத்துவதற்கு வலுவூட்டுவதாக அமைந்துள்ளது. mStudio அதன் ஒப்பற்ற இணைப்புத்திறனுடன், SLT-MOBITEL இனால் 22 மில்லியனுக்கு அதிகமானவர்களின் எதிர்பார்ப்புகளுக்கு வலுச் சேர்ப்பதுடன், நாடு முழுவதிலும் இசைச் சிறப்பில் புதிய அலையை தோற்றுவிப்பதாகவும் அமைந்திருக்கும். mStudio என்பது, ஒரு கட்டமைப்பு மாத்திரமன்றி, இசைத் துறையினுள் ஆர்வமுள்ளவர்களை உயர்ந்த நிலைக்கு கொண்டு செல்லக்கூடிய கட்டமைப்பாக அமைந்துள்ளது. இசை கட்டமைப்பில் பெறுமதி சேர்க்கும், mStudio இனால், பிரதான ஊடக நாளிகைகளுக்கு களிப்பூட்டும் அம்சங்களையும் சிறந்த இசை அனுபவங்களை வழங்குவதற்கும் வாய்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

# 'எதர காசி மெதர வாசி – சீசன் 02' முதற்கட்ட வெற்றியாளர்கள்

செலான் வங்கி, தனது 'எதர காசி மெதர வாசி - சீசன் 02' குலுக்கலின் முதற்கட்ட வெற்றியாளர்களை அண்மையில் அறிமுகம் செய்தது. இந்நடவடிக்கை இலங்கைக்கு மிகவும் அவசியமான அந்நியச் செலாவணியை அதிகரிக்கும் முனைப்புடன் ஆரம்பிக்கப்பட்டதோடு, 'எதர காசி மெதர வாசி' செலான் ரெமிடென்சஸ் ஊடாக பணம் அனுப்பும், பெறும் எந்த ஒருவருக்கும் ரூ.10 மில்லியன் பெறுமதியான பணப்பரிசுகளை வழங்கவுள்ளது.

குலுக்கலின் 1 ஆம் கட்டம் வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டபோது, சஞ்சீவ ஜயநாத் (பெறுநர் பிரிவு) மற்றும் ஆர்.டபிள்யூ. குசுமலதா (அனுப்புனர் பிரிவு) ஆகியோர் தலா ரூ.250,000 பணப்பரிசுகளை வென்றனர்.


'எதர காசி மெதர வாசி - சீசன் 02' ஆனது விரைவில் மாபெரும் இறுதிக் குலுக்கலோடு நிறைவுக்கு வரவிருப்பதோடு, இதன்போது ஓர் அதிர்ஷ்ட வெற்றியாளர் ரூ. 1 மில்லியன் பணப்பரிசைத் தட்டிச் செல்வார். தேசத்திற்கான தனது பொறுப்பை நிறைவேற்றும் விதமாக, தனது வாடிக்கையாளர்களது பணம் அனுப்பும் சாத்தியத்தின் உச்ச பலனைப் பெறுவதற்காக இந்த இரண்டாவது சீசனை தமிழ் சிங்கள புதுவருடக் காலத்தில் செலான் வங்கி ஒழுங்கு செய்திருந்தது.

உலகளாவிய பண அனுப்புகை சேவைகள், பரிமாற்றல் நிலையங்கள் மற்றும் வங்கிகள் உட்பட பல வெளிநாட்டு முகவர்களோடு கரம் கோர்த்துள்ள செலான் வங்கி, இலங்கைக்கு பணம் அனுப்பும் தேவையோடு வெளிநாட்டில் வசிப்பவர்களுக்காக பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட பலதரப்பட்ட பண அனுப்பல் சேவைகளைப் பெற்றுத் தருகின்றது. சவுதி அரேபியாவிலிருந்து Al Bliad வங்கியின் Enjas Mobile App ஊடாக பணம் அனுப்புபவர்கள் செலான் வங்கிக்கு பணத்தை அனுப்பும்போது எவ்வித பரிமாற்றல் கட்டணங்களும் அறவிடப்படுவதில்லை என்பதோடு, துரித சேவையின் ஒத்துழைப்போடு உடனடியாகப் பணத்தைப் பெற முடியும்.






# தன்னுயிரை மாய்க்கும் இளவட்டங்கள்



தங்கராசா விதுஷன்
vithushanvithu21@gmail.com
ஊடகக் கற்கைகள் துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

உடலில் இருந்து ஓர் உயிரை பறித்தெடுப்பதற்கு எவருக்கும் உரிமையில்லை. அதனால்தான், கொலைகளுக்கு கடுமையான தண்டனைகள் விதிக்கப்படுகின்றன. இதனிடையே தங்கள் உயிர்களை மாய்துக்கொள்வோரின் எண்ணிக்கை, இன்றைய காலக்கட்டங்களில் வெகுவாக அதிகரித்துள்ளது.

தன்னுயிர் மாய்த்தல் என்பது பாரிய சமூப் பிரச்சினையாகக் காணப்படுகின்றது. பெரியவர்கள், இளைஞர்கள் மத்தியில் மட்டுமன்றி சிறுவர்களிடத்திலும் இது அதிகரித்துள்ளது.

தங்களுடைய உயிரை தாங்களே மாய்த்துக் கொள்ளும் செயற்பாடு, 'தன்னுயிர் மாய்த்தல்' எனக் கருதப்படுகின்றது. குறிப்பாக, திட்டமிட்ட ரீதியில் வேண்டுமென்றே சுயஅழிவுக்கு வழிவகுப்பதாக தன்னுயிர் மாய்த்தல் அமைகின்றது. இது அவருடைய சொந்த விருப்பத்தின் பிரகாரமும் ஏனை யோர் கொடுக்கும் அழுத்தங்களால் மனவிரக்தி அடைந்தும் தன்னுயிரை மாய்த்துக்கொள்கின்றனர்.

இளைஞர்கள் மத்தியில் அதுவும் குறிப்பாக 18 - 26 வயதுக்கு இடைப்பட்ட நபர்களிடம் அதிகமாகவே இடம்பெறுகின்றது. உலகளாவிய ரீதியில் இது ஒரு பாரிய சமூகப் பிரச்சினையாகக் காணப்பட்டாலும் இலங்கையிலும் இன்று தன்னுயிரை மாய்த்துக்கொள்ளல் பாரிய சவாலுக்கு உட்பட்ட பிரச்சினையாகவே அமைந்துள்ளதை ஆய்வின் மூலம் அறிந்து கொள்ளலாம்.

இளைஞர்களிடையே தன்னுயிர் மாய்த்துக்கொள்ளுதல் அதிகரிப்பதற்கு பல்வேறு காரணங்கள் காணப்படுகிறன. வறுமை மற்றும் புறக்கணிப்புக் காரணமாக இளைஞர்கள் தன்னுயிர் மாய்த்துக்கொள்கின்றனர். ஒரு குடும்பத்தில் வறுமையைப் போக்க முடியாத சூழ்நிலை அமைகின்ற போது தம் உயிரை மாய்த்துக் கொள்கின்றனர்.

அதுமட்டுமல்லாது போதைப் பொருட்களுக்கு அடிமையாகி, அது கிடைக்காவிடின், இன்று இளைஞர்கள் தன்னுயிரை மாய்த்துக் கொண்டுள்ளதாக வைத்தியர்களின் அறிக்கையின்படி அறிந்து கொள்ளலாம்.

அதாவது, தோல்வியைத் தாங்க முடியாமை, ஏமாற்றத்தாலும் தன்னுயிர் மாய்த்துக்கொள்ளல் அதிகரித்துள்ளதைக் காணலாம். காதல் தோல்வியை தாங்கிக்கொள்ள முடியாததால் அவர்கள் தங்களை தாங்களே சுயஅழிவுக்கு இட்டுச் செல்கின்றனர். குறிப்பாக இவ்வாறான விடயம், பாமர மக்களைக்காட்டிலும் பல்கலைக்கழக இளைஞர்கள் அல்லது மாணவர்களிடம் அதிகமாக நடைபெற்றுக் கொள்வதாக பெற்றுக்கொண்ட தரவுகளின்படி அறிந்து கொள்ளலாம். மேற்குறிப்பிட்ட காரணங்கள் மட்டுமின்றி, ஆளுமைக்குறைபாடு, மனச்சோர்வு, தன்னம்பிக்கையின்மை, வேலையின்மை, அவமானம், குடும்ப வன்முறை போன்ற காரணங்களால் இலங்கையில் இளைஞர்கள் மத்தியில் அதிகளவு தன்னுயிர் மாய்க்கும் சம்பவங்கள் இடம்பெறுகின்றன.

மேற்கூறிய காரணங்களால் தன்னுயிர் மாய்த்துக்கொள்ளல் நடைபெற்றாலும் அதனால், பல்வேறுபட்ட பாதிப்புகளும் ஏற்படுகின்றன. குறிப்பாக அவர்களுடைய குடும்ப உறுப்பினர்கள் பாதிப்படைகின்றனர். மற்றும் மேலே குறிப்பிட்ட காரணங்களையுடைய இன்னுமொரு நபர், தன்னுயிர் மாய்த்துக் கொள்வதற்கான எண்ணமும் உருவாகிறது.

இவ்வாறாக தன்னுயிர் மாய்த்துக்கொள்ளும் ஒரு நபரிடம் பின்வரும் அறிகுறிகள் காணப்படுவதைக் காணலாம். தொடர்ச்சியாக தன்னுயிர் மாய்க்கும் தொடர்பான பேச்சுகள் காணப்படுமிடத்து அவர் தன்னுயிர் மாய்க்கும் மனநிலையில் இருக்கின்றார் என்பதனை அறிந்து கொள்ளலாம்.

நம்பிக்கையின்மை காணப்படுகின்றது என்றால், அதுவும் ஒரு வகையில் தன்னுயிர் மாய்க்கும் அறிகுறியென்றே குறிப்பிட முடியும். ஒரு நபர் எல்லோரிடமும் சகஜமாகப் பழகி திடீரென அமைதியாகின்றார் என்றால் அதுவும் ஓர் அறிகுறியென்றே குறிப்பிட வேண்டும். அதேபோன்று தன்னை தனிமைப்படுத்திக் கொள்ளல், பொதுவான எந்த விடயங்களிலும் ஈடுபடாமை போன்ற அறிகுறிகள் ஒரு நபரிடம் காணப்பட்டால் அவர் தன்னுயிர் மாய்க்கும் செய்து கொள்ளும் எண்ணமுடைய நபர் என்றே குறிப்பிடவேண்டும்.

இன்று பல்கலைக்கழக மாணவர்கள், பணிபுரிகின்ற இளைஞர்கள் மத்தியில் இவ்வாறான மனநிலை அதிகரித்து வருகின்றது. சென்ற வருடத்திலும் பல்கலைக்கழக மாணவர்கள் இவ்வாறாக தன்னுயிர் மாய்த்துக்கொண்டுள்ளனர்.

எனவே, இவ்வாறான இளைஞர்கள் மத்தியிலான தன்னுயிர் மாய்த்துக்கொள்ளல் பாரிய சமூகப் பிரச்சினையாகக் காணப்படுவதால் அதனைத் தடுப்பதற்கு அல்லது குறைப்பதற்கான வழி வகைகளையும் ஆராய்ந்து கொள்ளுதல் வேண்டும்.

இளைஞர்கள் மத்தியில் தன்னுயிர் மாய்த்துக்கொள்ளும் சம்பவங்கள் தடுப்பதற்கான செயற்பாடுகளாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

தன்னுயிர் மாய்த்துக்கொள்ளுதல் தொடர்பான அறிகுறிகளுடன் ஒரு நபர் காணப்பட்டால் அவருடைய பிரச்சினையைக் கேட்டு அறிந்து கொள்ளுதல் வேண்டும். அவ்வாறு பிரச்சினையை கேட்கின்ற சந்தர்ப்பத்தில் அப்பிரச்சினை தீர்க்கக்கூடியதாகக் காணப்பட்டால், அதற்கான வழிமுறைகளை எடுத்துக்கூறி அந்நபரை தன்னுயிர் மாய்ப்புச் செய்யாமல் பாதுகாத்துக் கொள்ளலாம்.

ஒருவர் தனிமையில் இருக்கின்றார் என்றால் அவரின் தனிமை நிலையைப் போக்குவதற்கான பொதுவான செயற்பாடுகளில் ஈடுபடச் செய்தல் அவசியமாகும். நண்பர்களுடன் உரையாட வைத்தல், வெளியிடங்களுக்குக் கூட்டிச்சென்று அவரினுடைய தனிமை உணர்வை இல்லாது செய்கின்ற போதும் தன்னுயிர் மாய்த்துக்கொள்ளும் எண்ணத்தை இயன்றளவு குறைத்துக் கொள்ளலாம்.

சில நபர்களை தனிமையிலிருந்து மீட்டெடுக்க முடியாத சந்தர்ப்பத்தில் உளவளத்துணை வசதிகளை செய்வதன் மூலமும் இயன்றளவு இச்சமூகப் பிரச்சினையைக் கட்டுப்படுத்திக் கொள்ளலாம். மற்றும் தன்னம்பிக்கை ஊட்டும் செயற்பாடுகளில் ஈடுபடுத்துவதன் மூலமும் இதனை ஓரளவிற்கேனும் குறைத்துக் கொள்ளலாம். அதேபோன்று, முக்கியமாக இலங்கை கல்வித் திட்டங்களில் தன்னுயிர் மாய்த்தல் தொடர்பான விளிப்புணர்வை அறிமுகப்படுத்தி, அதனை மாணவர்களிடம் கற்றுக் கொடுப்பதாலும் இந்நிலைமையைக் கட்டுப்படுத்தலாம்.

நாட்டின் சட்டங்களில் தன்னுயிர் மாய்த்தலை தடுக்கும் சட்டத்தை உருவாக்குவதாலும் இதனை குறைத்துக் கொள்ளலாம். உதவுகின்ற மனோபாவம் இன்று இளைஞர்களிடம் குறைந்துவிட்டது. இளைஞர்களிடையே ஒருவருக்கொருவர் உதவும் மனோபாவத்தை உருவாக்குவதாலும் தன்னுயிர் மாய்த்தலை இயன்றளவு குறைக்கலாம்.

முக்கியமாக தன்னுயிர் மாய்க்க முயன்ற நபரை கண்காணித்தல் என்பது அவசியமானது ஆகும். ஏனெனில் அவர் மீண்டும் அவ்வாறான முயற்சியில் ஈடுபடுவதற்கான வாய்ப்பு காணப்படுவதால், அவரை குடும்ப உறுப்பினர்களோ, நண்பர்களோ அவரை தினமும் கண்காணித்தல் அவசியமான ஒரு செயற்பாடாக அமைகின்றது.

எனவே, மேற்கூறப்பட்ட செயற்பாடுகளின் மூலம் ஓரளவிற்கேனும் இளைஞர்கள் மத்தியிலான தன்னுயிர் மாய்க்கும் எண்ணத்தை குறைத்துக் கொள்ளலாம். தன்னுயிர் மாய்த்தல் என்பது ஒரு தனிப்பட்ட நபரினுடைய பிரச்சினையாக காணப்படவில்லை. இது ஒட்டுமொத்த சமூகத்தினுடைய பிரச்சினையாகவே அமைகின்றது. இலங்கையில் இளைஞர்கள் மத்தியிலான தன்னுயிர் மாய்த்தலை தடுப்பதற்கு ஒவ்வொரு நபரும் முன்வருவதன் மூலம் தன்னுயிர் மாய்த்தலை நிறுத்த முடியும்.

பொருளாதார நெருக்கடிக்கு முந்திய வருடங்களுடன் ஒப்பிடுகையில், இலங்கையில் தன்னுயிரை மாய்த்துக்கொள்ளும் சதவீதம் கணிசமான அளவு அதிகமாக உள்ளது. வேலையின்மை மற்றும் பணிநீக்கங்கள் ஏற்பட்டுள்ளதால் இவ்வாறான சிந்தனை அதிகரித்துள்ளதாக மனநல மருத்துவர்கள் கூறியுள்ளனர்.

"2022, 2023 ஆம் ஆண்டுகளுக்கான தரவு எதுவும் பெறப்படவில்லை. 2023ஆம் ஆண்டின் தை முதல் ஏப்ரல் வரையான நான்கு மாதங்களில் தன்னுயிரை மாய்த்துக்கொண்டோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது" என்று தேசிய மனநல மருத்துவ ஆலோசகர், வைத்தியர் சத்துரி சுரவீர தெரிவித்துள்ளார்.

இலங்கையில் சுமார் 3,000 தற்கொலை வழக்குகள் வருடாந்தம் பதிவாகின்றன. ஒவ்வொரு நாளும் சுமார் எட்டு முதல் ஒன்பது வழக்குகள் பதிவாகின்றன என்றும் சுரவீர கூறினார்.

அதிகரித்து வரும் வாழ்க்கைச் செலவு, வேலையில்லாத் திண்டாட்டம் மற்றும் உறுதியற்ற தன்மை ஆகியவற்றின் விளைவாக மக்கள் உணரும் பொருளாதார அவலநிலை காரணமாக தன்னுயிரை மாய்த்துக்கொள்ளுதலின் எண்ணிக்கையில், வெளிப்படையான அதிகரிப்பு காணப்படுகின்றது.

இதேவேளை, ஒரு நபர் தன்னுயிரை மாய்த்துக்கொள்வதைத் தடுக்க, அருகிலுள்ள மனநல நிபுணரைச் சந்திப்பது அல்லது 1926 என்ற தேசிய மனநல உதவிக்கு அழைப்பது போன்ற பல வழிகள் உள்ளன என்பதையும் விளங்கிக்கொள்ளல் அவசியமாகும்.

சென்னை

# மீண்டும் ‘குடும்ப விபசாரம்’

ஐயாயிரம் ரூபாய் கொடுத்தால் ஒரு நாள் முழுக்க வீட்டில் தங்கி காலை சாப்பாடு, மதியம் பிரியாணி விருந்துடன் வாடிக்கையாளர்களை உல்லாசப்படுத்தி இன்ப வெள்ளத்தில் மிதக்க வைப்பதுதான் ‘குடும்ப விபசாரம்’ ஆகும்.

மீண்டும் ‘குடும்ப விபசாரம்’ சென்னையில் தலை தூக்கியுள்ளது. ரூ.5 ஆயிரம் கொடுத்தால் விருந்து, உல்லாசத்துடன் நாள் முழுவதும் உபசரிப்பார்கள். இந்த விபசார கும்பலை சேர்ந்த 3 பெண்கள் மீட்கப்பட்டனர்.



குடும்ப பெண்களாக இருக்கும் சிலர் இதுபோன்ற விபசாரத்தில் ஈடுபடுவது வழக்கம். இவர்கள் குடும்பம் வெளிமாநிலங்களில் இருக்கும். இவர்கள் சென்னைக்கு வேலை தேடி வருவது போன்று வந்து விபசார தொழிலை ஓசையில்லாமல் செய்வார்கள். கை நிறைய பணத்தை சம்பாதித்துக் கொண்டு மீண்டும் சொந்த ஊருக்கு செல்வார்கள்.

பொலிஸில் பிடிப்பட்டாலும் சம்பாதித்த பணத்தை குடும்பத்துக்கு அனுப்பி வைத்துவிட்டு அரசு காப்பகத்தில் தங்கி இருப்பார்கள்.

பின்னர் நீதிமன்றம் மூலம் விடுதலை பெற்று சொந்த ஊர்களுக்கு போவார்கள். ஒரு மாதம் கழித்து மீண்டும் வேலைக்கு வருவது போல் வந்து சென்னையில் மறுபடியும் தொழிலை தொடங்குவார்கள்.

மும்பை

# மூதாட்டியிடம் திருமண மோசடி

திருமணம் செய்து கொள்வதாக ஆசை காட்டி 75 வயது மூதாட்டியிடம் ரூ.12 இலட்சம் மோசடி செய்த இளைஞர்கள் இருவரை மும்பை பொலிஸார் கைது செய்தனர்.

மும்பை மாட்டுங்கா பகுதியை சேர்ந்த 75 வயது மூதாட்டியை கடந்த ஆண்டு நவம்பர் மாதம் சமூக வலைதளம் மூலம் ஆசாமி ஒருவர் தொடர்பு கொண்டு, தான் ஜெர்மனியை சேர்ந்தவர் என அறிமுகம் செய்தார்.

மூதாட்டியும் அது மோசடி ஆசாமி என தெரியாமல் பேசி வந்தார். ஒருநாள் அந்த நபர் மூதாட்டியை திருமணம் செய்ய விரும்புவதாக ஆசை வார்த்தைகளை அள்ளி விட்டார். இதில் மூதாட்டி மயங்கியதாக தெரிகிறது. இந்த நிலையில் அவர் சமீபத்தில் மூதாட்டிக்கு விலை உயர்ந்த அன்பளிப்பை அனுப்பி இருப்பதாக தெரிவித்தார்.

பின்னர் அவர் கூட்டாளியை வைத்து சுங்க துறை அதிகாரி போல மூதாட்டியிடம் பேச வைத்தார். அந்த நபர் மூதாட்டியின் வெளிநாட்டு நண்பர் அனுப்பிய விலை உயர்ந்த அன்பளிப்புக்கு ரூ.3.85 இலட்சம் சுங்க கட்டணம் செலுத்த வேண்டும் என தெரிவித்தார். மூதாட்டியும் மோசடி நடப்பது தெரியாமல் அவர் கூறிய வங்கி கணக்குக்கு பணத்தை அனுப்பினார்.

இந்தநிலையில் எட்டு நாள்களுக்கு பிறகு மோசடி ஆசாமி மீண்டும் மூதாட்டியை தொடர்பு கொண்டு பேசினார். அப்போது இலண்டனில் இருந்து புதுடெல்லி வந்ததாகவும், அதிகளவு வெளிநாட்டு பணம் இருந்ததால் சுங்க அதிகாரிகள் தன்னை பிடித்து வைத்து இருப்பதாக தெரிவித்தார். சுங்க அதிகாரிகள் காவலில் இருந்து வெளியே வர அவர்களுக்கு ரூ.8.78 இலட்சம் வரி செலுத்த வேண்டும் என கூறினார். இதையும் உண்மையென நம்பி அவர் கூறிய வங்கி கணக்குகளுக்கு மூதாட்டி பணத்தை அனுப்பினார். அதன்பிறகு மூதாட்டியால் சமூகவலைதள வெளிநாட்டு நண்பரை தொடர்பு கொள்ள முடியவில்லை.

தான் ஏமாற்றப்பட்டதை உணர்ந்த மூதாட்டி சம்பவம் குறித்து மாட்டுங்கா பொலிஸில் புகார் அளித்தார். விசாரணையில் 26, 22 வயதான இரு இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர்.

கடலூர்

# கர்ப்பப்பையை குடலுடன் சேர்த்து தைத்த மருத்துவர்கள்

கடலூரில் சமீபத்தில் பிரசவத்துக்காக பெண்ணொருவர் அனுமதிக்கப்பட்ட நிலையில் அறுவை சிகிச்சை மூலம் அவருக்கு குழந்தை பிறந்தது. இதனை அடுத்து அறுவை சிகிச்சையின் போது கர்ப்பப்பையை குடலுடன் சேர்த்து மருத்துவர் தைத்து விட்டதாக கூறப்படுகிறது.

இதனை அடுத்து பாதிக்கப்பட்ட பெண்ணின் பெற்றோர் மற்றும் குடும்பத்தினர் அரசு மருத்துவமனையில் தர்ணா போராட்டத்தில் ஈடுபட்டுள்ளதால் பெரும் அதிர்ச்சி ஏற்பட்டுள்ளது.

மேலும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தாங்கள் தற்கொலை செய்து கொள்ளப் போவதாகவும் தற்கொலைக்கு பின்ன தங்கள் உடல் உறுப்புகளை தானமாக எடுத்துக் கொள்ளுங்கள் என்றும் கூறி வருவது பரபரப்பு ஏற்படுத்தி உள்ளது

இந்த நிலையில் காவல்துறையினர் பெண்ணின் குடும்பத்தினரை சமாதானப்படுத்த முயற்சிகள் ஈடுபட்டு வருவதாகவும் தவறான அறுவை சிகிச்சை செய்த மருத்துவர் மீது உரிய நடவடிக்கை எடுக்க உறுதி அளித்துள்ளதாகவும் கூறப்படுகிறது.



உலகக் கிண்ண்ண தகுதிகாண் போட்டிகள்:

# மேற்கிந்தியத் தீவுகளை வென்ற சிம்பாப்வே

சர்வதேச கிரிக்கெட் சபையின் உலகக் கிண்ண தகுதிகாண் போட்டிகளில், ஹராரேயில் நேற்று முன்தினம் நடைபெற்ற மேற்கிந்தியத் தீவுகளுடனான போட்டியில் சிம்பாப்வே வென்றது.

ஸ்கோர் விவரம்:


நாணயச் சுழற்சி: மே. தீவுகள்

சிம்பாப்வே: 268/10 (49.5 ஓவ. ) (துடுப்பாட்டம்: சிகண்டர் ராசா 68 (58), றயான் பேர்ள் 50 (57), கிறேய்க் எர்வின் 47 (58) ஓட்டங்கள். பந்துவீச்சு: கீமோ போல் 3/61, அல்ஸாரி ஜோசப் 2/42, அகீல் ஹொஸைன் 2/45, கைல் மேயர்ஸ் 1/42, றொஸ்டன் சேஸ் 1/27)

மே. தீவுகள்: 233/10 (44.4 ஓவ. ) (துடுப்பாட்டம்: கைல் மேயர்ஸ் 56 (72), றிஸ்டன் சேஸ் 44 (53), நிக்கலஸ் பூரான் 34 (36), ஷே ஹோப் 30 (39) ஓட்டங்கள். பந்துவீச்சு: டென்டாய் சட்டாரா 3/52, றிச்சர்ட் நகரவா 2/25, பிளஸிங்க் முஸர்பனி 2/33, சிகண்டர் ராசா 2/36, வெலிங்டன் மஸகட்ஸா 1/39)

போட்டியின் நாயகன்: சிகண்டர் ராசா





# புஷ்கட்ஸைக் கைச்சாத்திட்டதை அறிவித்த இன்டர் மியாமி

ஸ்பானிய லா லிகா கால்பந்தாட்டக் கழகமான பார்சிலோனாவின் அணித்தலைவரான சேர்ஜியோ புஷ்கட்ஸைக் கைச்சாத்திடுவதை ஐக்கிய அமெரிக்க மேஜர் லீக் கழகமான இன்டர் மியாமி அறிவித்துள்ளது.

அந்தவகையில் தனது முன்னாள் சகவீரரான லியனல் மெஸ்ஸியுடன் 34 வயதான புஷ்கட்ஸ் மியாமியில் இணையவுள்ளார். சவுதி அரேபியக் கழகங்களிருந்தும் புஷ்கட்ஸ் வாய்ப்புகளைக் கொண்டிருந்தபோதும் அவர் மியாமியையே தேர்வு செய்திருந்தார்.

# தோப்பூர் கிண்ணத் தொடர் ஆரம்பமானது

■ தீஷான் அஹமட்

தோப்பூர் கிண்ண கடினபந்து கிரிக்கெட் போட்டித் தொடரின் ஆரம்ப நிகழ்வானது தோப்பூர் அல்ஹம்றா மத்திய கல்லூரி மைதானத்தில் அண்மையில் கோலாகலமாக இடம்பெற்றது.

தோப்பூர் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையால் நான்கு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடாத்தப்படும் ஆறாவது இத்தொடரில் 23 அணிகள் பங்கேற்கின்றன.

இத்தொடரின் ஆரம்ப நிகழ்வில் அனைத்து அணிகளும் தங்களது புதிய மேலங்கிகளை அணிந்து மோட்டார் சைக்கிள்களில் பேரணியாக வந்தனர். அத்தோடு தோப்பூர் கிண்ணத்தின் அறிமுகமும், அணிகளின் அறிமுக நிகழ்வுகளும் இடம்பெற்றன.



டயலொக் பாடசாலைகள் றக்பி லீக் தொடர்:

# வென்ற இசிப்பத்தன, சென். ஜோசப், றோயல்

டயலொக் பாடசாலைகள் றக்பி லீக் தொடரில், நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டிகளில் இசிப்பத்தன கல்லூரி, சென். ஜோசப் கல்லூரி, றோயல் கல்லூரி, டி.எஸ். சேனநாயக்க கல்லூரி, சாஹிராக் கல்லூரி ஆகியன வென்றுள்ளன.

சென். தோமஸில் நடைபெற்ற போட்டியில் 29-20 என்ற புள்ளிகள் கணக்கில் அவ்வணியை இசிப்பத்தன வென்றது.

றோயல் வளாகத்தில் நடைபெற்ற வெஸ்லிக் கல்லூரியுடனான போட்டியில் 3-0 என்ற புள்ளிகள் கணக்கில் சென். ஜோசப் வென்றது.

விஞ்ஞானக் கல்லூரியின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியை 45-10 என்ற புள்ளிகள் கணக்கில் றோயல் கல்லுரி வென்றது.

பல்லேகலவிலுள்ள திருத்துவக் கல்லூரி றக்பி அரங்கில் நடைபெற்ற சென். அந்தனிஸ் கல்லூரியுடனான போட்டியில் 23-19 என்ற புள்ளிகள் கணக்கில் டி.எஸ். சேனநாயக்க கல்லூரி வென்றது.

போகம்பரவில் நடைபெற்ற தர்மராஜ கல்லூரியுடனான போட்டியில் 18-15 என்ற புள்ளிகள் கணக்கில் சாஹிராக் கல்லூரி வென்றது.

ரஷ்யா

# பரபரப்பு முடிந்தது


ரஷ்யத் தலைநகர் மொஸ்கோவைக் கைப்பற்றப் போவதாக அறிவித்திருந்த வாக்னர்குழு, திடீரென தனது முடிவை மாற்றி பின்வாங்கியது. இதனால் பல மணிநேரம் நீடித்த பரபரப்பு முடிவுக்கு வந்துள்ளது.


புட்டினுக்கு நெருக்கமானவராக அறியப்பட்ட வாக்னர் குழுவுக்கும் ரஷ்ய இராணுவத்துக்கும் இடையேயான மோதல் போக்கை அடுத்து, எவரும் எதிர்பாராத நிலையில் அக்குழு ரஷியாவுக்கு எதிராகத் திரும்பியது. ரஷ்யாவின் தென் பகுதியில் அமைந்துள்ள இராணுவ கட்டுப்பாட்டு மையத்தை கைப்பற்றியதாக அறிவித்தது.

இதையடுத்து ரஷ்யாவுக்கு எதிராக ஆயுதம் ஏந்துபவர்கள் தேசவிரோதிகளாக கருதப்பட்டு கடும் நடவடிக்கைக்கு ஆளாவார்கள் என விளாடிமிர் புட்டின் நேரடியாக எச்சரிக்கை விடுத்திருந்தார்.

இருப்பினும் புட்டினின் எச்சரிக்கையை கண்டுகொள்ளாத பிரிகோஷின், தலைநகர் மொஸ்கோவையும் கைப்பற்றப் போவதாக அறிவித்து, தனது இராணுவ அணிவகுப்பையும் நடத்தினார்.

இதையடுத்து ரஷ்யாவின் நட்பு நாடான பெலரசின் ஜனாதிபதி





அலெக்ஸாண்டர் லூகாஷென்ஸ்கோ வாக்னர் குழுவுடன் பேச்சுவார்த்தை நடத்தினார்.

இந்தச் சமரச முயற்சியின்படி, பிரிகோஷின் பெலரசுக்கு செல்ல இருப்பதாகவும், ஆயுதப்புரட்சி முடிவுக்கு வருவதாகவும் கூறப்படுகிறது. இதேநேரம் பிரிகோஷின் மற்றும் அவரது படையினர் மீது தொடரப்பட்ட கிரிமினல் வழக்கு கைவிடப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

வெல்காம்

# தங்கச் சுரங்கம் இடிந்து விபத்து – 31 பேர் பலி

தென்ஆப்பிரிக்காவில் அழிந்து வரும் கனிம வளங்களை பாதுகாப்பதற்காக சட்டவிரோதமாக செயற்பட்டு வரும் ஏராளமான தங்கச் சுரங்கங்களை அந்நாட்டு அரசாங்கம் மூடி வருகிறது.

இந்நிலையில் தென் ஆப்பிரிக்காவின் ப்ரீஸ்டேட் மாகாணத்தில் சுரங்கம் ஒன்று இடிந்து விழுந்தது. இடிபாடுகளில் சிக்கி 31 தொழிலாளர்கள் இறந்தனர். மேலும் பலர் காயமடைந்தனர். கடந்த மாதம் 18 ஆம் திகதி சட்டவிரோதமாக சுரங்கம் தோண்டி எடுத்துக் கொண்டிருந்தபோது இந்த வெடி விபத்து ஏற்பட்டதாக கூறப்படுகிறது.

சுரங்கப் பணியின் போது எதிர்பாராமல் நடந்த வெடிவிபத்தால் 31 பேர் இடிபாடுகளில் சிக்கி உயிரிழந்துள்ளனர். இந்தச் சம்பவம்



தொடர்பாக 16 பேர் பொலிஸாரிடம் சரணடைந்துள்ளனர். 2 பேரின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளன. விபத்து ஏற்பட்ட சுரங்கப் பகுதி மிகவும் அபாயகரமானது என்பதால் மீட்டுப்பணிகள் தாமதமாக நடைபெற்று வருகின்றன.

பிரான்ஸ்

10 ஆண்டுகளாக பாலியல் தொழிலில் தள்ளிய கொடூரம்

# கணவனுடன் 50 பேர் கைது

மனைவிக்கு உணவில் மயக்க மருந்து கொடுத்து அவருக்கே தெரியாமல், 10 ஆண்டுகளாக பாலியல் தொழிலில் ஈடுபடுத்திய கணவனின் செயல், பிரான்ஸை அதிரச் செய்துள்ளது. இது தொடர்பாக 50 க்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பிரான்ஸ் நாட்டின் தெற்கில் உள்ள பகுதி, அவிக்னான். இங்கு வசித்து வரும் டொமினிக் என்பவர், தற்போது 50 வயதாகும் தன் மனைவிக்கே தெரியாமல், இரவு உணவில் மயக்க மருந்தைக் கொடுத்து, அவரை பாலியல் தொழிலில் ஈடுபடுத்தி வந்துள்ளார்.

கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலாக, பல்வேறு நபர்கள் தன் மனைவியை 90க்கும் மேற்பட்ட முறை பலாத்காரம் செய்ய அனுமதித்துள்ளார். அத்துடன் நிற்காமல், அதனை வீடியோவாகவும் பதிவு செய்து வைத்துள்ளார்.

இந்தக் குற்றச் செயலில், 83 பேருக்கு தொடர்பு இருப்பது தெரிய வந்துள்ளது. அவர்கள் அனைவரும் 26 வயது முதல் 73 வயதுக்கு உட்பட்டவர்கள். இவர்களில் நகராட்சி கவுன்சிலர், வங்கி ஊழியர், சிறைக்காவலர், செவிலியர், ஊடகவியலாளர், லொறி ஓட்டுநர் உள்ளிட்டோரும் அடங்குவர்.

தொடர்ச்சியாக நடைபெற்று வந்த இந்தக் குற்ற நிகழ்வு வெளியே தெரியாமல் இருக்க, டொமினிக், சில நிபந்தனைகளை விதித்து ஆண்களை அனுமதித்துள்ளார். அதன்படி, வாடிக்கையாளர்கள் புகையிலை பயன்படுத்தக்கூடாது; வாசனை திரவியங்களை உடலில் பூசியிருக்கக் கூடாது. குளியலறையில் ஆடைகளை களைந்துவிட்டு வெந்நீரில் கால்களை கழுவிய பிறகே மனைவியின் அறைக்குச் செல்ல வேண்டும் என்பது உள்ளிட்ட கட்டுப்பாடுகள் இருந்துள்ளன.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் திங்கட்கிழமை, 26 ஜூன் 2023, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.